# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ வைகாசி 1979 ★ இதழ் - 41


## சிறுவர் ஆண்டுச் சிந்தனை


சர்வதேசச் சிறுவர் ஆண்டு நிகழ்ச்சிகளில் மில்க்வைற் தாபனமும் செய்தியும் ஊக்கம் எடுப்பதை அறிந்த இலங்கைக் காரியாலயம் எம்மை வெகுவாகப் பாராட்டி நாம் மேலும் பணிபுரிதல் வேண்டும் என்றும் உபகரித்தல் வேண்டும் என்றும் கேட்டுள்ளது. பிள்ளைகளைத் தெய்வங்கள் எனப்போற்றும் நாம் அவர்களுக்காக "ஆத்திசூடி", "கொன்றை வேந்தன்" என்னும் இருநூல்களையும் ஆங்கில மொழிபெயர்ப்புடன் ஆயிரக்கணக்கில் அச்சிட்டு வழங்கியுள்ளோம். இன்னும் பிள்ளைகளின் நற்சார்பு கருதிப் பல வெளியீடுகளைத் தயாரித்து வருகிறோம். அவை வெகுவிரைவில் வெளிவரும் என்பதையும் அறியத்தருகிறோம்.

சர்வதேசச் சிறுவர் ஆண்டு என்பதை ஆங்கிலத்தில் International Year of the Child என்பர். அதன் சுருக்கம் (IYC) என்பதாகும். அது உலகமெங்குமுள்ள (100,0000000) நூறுகோடி சிறுவரின் நலத்தைக் கவனிப்பதற்காக ஐக்கிய நாடுகள் நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட தாபனமாகும். இதனால் குழந்தைகளை உடல் வலிமையும் மனவலிமையும் உள்ள மனிதராக உருவாக்குவதே நோக்கமாகும்.

பறவைபோலப் பறக்கவும், மீனைப்போல நீந்தவும் மிருகங்களைப் போலக் குரல் எழுப்பவும் பழகிய மனித இனம், மனிதனாக மண்மேல் நடக்கப் பழகவில்லை. பாரத நாட்டுப் பண்பாட்டில் வளர்ந்த வசிட்டர், அத்திரி, வள்ளுவர், ஔவையார் போல இக் காலத்தவர் நடக்கப் பழகவில்லை. வேகமாக ஓடவும் ஒற்றைக்காலில் நிற்கவும் ஆடிக்கொண்டே நிற்கவும் உலகமெங்கும் பழகுகிறார்கள். பண்பாட்டுக்குரிய பழக்கங்களில் பயிற்சி பெறுகிறார்களில்லை. பண்பாட்டைப்பற்றிப் பேசுகிறவர்களைப் பைத்தியக்காரர் என்று கருதுகிறார்கள்.


பிள்ளைகள் பழகவேண்டியவை எவ்வளவோ உண்டு. உண்ணும்போது உணவைச் சிந்துகிறவர்களும், பருகும்போது நீரைச் சிந்துகிறவர்களும் உலகில் போதிய உணவின்றியும் நீரின்றியும் கோடிக்கணக்கான மக்கள் துன்புறுகிறார்கள் என்பதைச் சிந்திக்கவேண்டும்.

[ தொடர்ச்சி 15-ஆம் பக்கம்



சர்வதேசச் சிறுவர் ஆண்டு நினைவையொட்டி வெளியிட்ட கொன்றைவேந்தன் வெளியீட்டை தொழிலதிபரிடமிருந்து பெறுபவர் தமிழ்நாட்டு ஸ்தபதி தேவலிங்கம் அவர்கள்.

உ
சிவமயம்



# கடவுள் வணக்கம்

## திருநாவுக்கரசுநாயனுர் தேவாரம்

திருவையாறு
திருவிருத்தம்
திருச்சிற்றம்பலம்

சிந்திப் பரியன சிந்திப் பவர்க்குச் சிறந்துசெந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப் பிறையணிந் தாடுமை யாற னடித்தலமே.

மாலைப்பிறையை அணிந்தும், பாம்பினைக் கழல்போலச் சூடியும், திருவையாறு என்னும் திருத்தலத்திலே எழுந்தருளியுள்ள அப்பனுடைய திருவடிகள் மனத்தால் சிந்திப்பதற்கு அரியன. சிந்திப்பவர்களுக்குப் பேரின்பப் பேருகிய முத்தித்தேனை முந்திப் பொழிவன. வீட்டின்பத்தைத் தருவன. ஆன்மாவை மொய்த்து இருள் கொடுக்கும் ஆணவ மலத்தின் வலிமையை நீக்குவன. ஆன்மாவைப் பந்தித்து நிற்கும் பழவினையாகிய சஞ்சிதத் தொகுதியைத் தீர்ப்பன.

### ஐயாறப்பன் அடித்தலம்

(திருநாவுக்கரசுநாயனுர் திருவையாற்று அப்பனைப் பலமுறை தரிசித்துத் திருப்பதிகங்கள் பாடியருளியுள்ளார். திருவையாற்றிலேதான் அவர் திருக்கைலைக் காட்சியைக் கண்டதோடு உலகமெங்கும் நிலவும் அம்மையப்பன் திருவுருவையும் எல்லா உயிரினங்களிலும் கண்டு உவகை கொண்டார்.)

வேதாங்கம் எனவுள்ள ஆறங்க வடிவாயுள்ள ஐயாறப்பன் அடித்தலங்கள் பிறவியை அறுப்பன, மனத்திலே பொழித்தன, இயமனை உதைத்தன, தக்கன் வேள்வியைச் சிதைத்தன. அவை மணிபோலும் நிறத்தினையுடையன, பொன்னிறம் பொருந்தியன, மின்னலைப்போலப் பிரகாசிப்பன, திருக்கைலாய மலையை உடைத்தன, அன்பர்களால் போற்றப்படுவன. அவர்களுக்கு அணியாயிருப்பன, தேவர்களால் அறிய முடியாதனவாயுள்ளன. துன்பந் துடைப்பனவாயும் கரையேற்றுவனவாயும் விளக்கமாயும் உள்ளன. ஆதியும் அந்தமும் இல்லாதன. பிறவிப் பிணிக்கு மருந்தாயுள்ளன. நரகத்தினின்றும் காப்பன, நரகத்திடையுள்ளவரை மீட்பன, தொழுவார்களுக்கு அமுதமானவை, கடல்போன்ற துன்பத்திலின்றும் தொண்டரைக் கரைசேர்க்கும் தோணி போன்றன. பொன் போன்றன. அன்பர்களான சிவநேயர்களுக்கு அணிமையில் உள்ளன. தொழுபவர்களுக்கு அமரர் உலகத்துப் பெருவாழ்வை அளிப்பன. செய்தற்கரிய பெருந்தவம் செய்தவர்களுக்கு சிந்தனையைத் திருத்தி வானுலகில் மேலான பதவியைத் தருவன. ஆந்தையும் பறண்டையும் பேயும் நரியும் நிரம்பிய சுடுகாட்டில் திருநடனஞ் செய்வன. தேவர்கள் முடி சாய்த்து வணங்குவன. மண்ணுலகத்தவர்கள் மலரிட்டு வணங்குவன. இமயமலையரசன் மகளாராகிய பார்வதியின் மனத்துள் இருப்பன. நிட்டையிலிருப்பவர்தம் நினைவில் இருப்பன. காவிரி நீரை வளஞ்செய்து நிற்பன. புதுமலர் போன்றன. போற்றி என்று வழிபடுபவர்களுக்குப் பொருந்திய துணையாயுள்ளன. அறம் வளர்த்த நாயகியின் சிலம்பு பாடகம் முதலிய காலணிகள் ஒலிப்பதற்கு உடனுயுள்ளன. உற்றவர் இல்லாதபோது உறுதுணையாயுள்ளன. கற்றறிந்தார்கள் போற்றிப்புகழுவன. அன்பு செய்பவர்களுக்கு வானுலகந்தருவன. இல்லாதவர்களுக்கு அரும்பொருளானவை. உம்பருலகைக் கடந்து அப்பாலும் போற்றப் பெறுபவை. உயிர்களை உய்திபெற ஆட்கொள்பவை. பேரின்பம் நல்குபவை. உத்தமர்க்கு ஞானச்சுடராய் ஒளி தருவன. யானையின் தோலை உரித்தன. விண்ணும் மண்ணுமாய் உள்ளவை. இயமனையும் அவன் தூதுவரையும் ஓட ஓட உதைத்தவை. அடியவர்களுக்கு ஆதரவாயுள்ளவை.

அன்போடு தொழும் அடியவர்களுக்கு வானுலகத்தையடைய ஏணிபோலிருப்பன, வானவர்கள் முடியில் இரத்தினக் கற்கள்போல அணி செய்வன. ஞானமும் ஞானப் பொருளும் வேதமும் வேள்விப்பொருளுமாய் உள்ளன. விண்ணும் மண்ணும் சூரியனும் சந்திரனுமாயுள்ளன. ஆதியும் அந்தமுமாயுள்ளன. உமாதேவியார் வருடும்போதும்

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்)




### நட்பாராய்தல்

நேயமாக்கிக் கொள்ளத்தக்கவர்களை ஆராயுந்திறம்
குணனும் குடிமையும் குற்றமும் குன்று
இனனும் அறிந்தியாக்க நட்பு.

ஒருவனுடைய குணத்தையும், நற்குடிப்பிறப்பையும், குற்றத்தையும், குறைவில்லாத கூட்டுறவையும் ஆய்ந்தறிந்து அவனோடு நட்புச் செய்யவேண்டும்.

### The Choice of Friends

Let friendship be made after knowing one's character, lineage, faults and kindred which has suffered no diminution.

★ பணிவிடைபுரிபவன் பக்குவம் அடைகிறுன் ★

# தொழில் தந்தையர்

காலப்போக்கில் உலகத்தின் நிலைமை மாறியமைகிறது. உலகப் போக்குக்குத்தக்கதாக நாட்டு நிலைமையும் மாறியமைகிறது. நாட்டின் நிலைமையை மாற்றியமைப்பவர் நாமே. நமது நாடு இன்றைய தலைமுறையில் தொழில் வளம் பெற்று வருகிறது. நாட்டின் பல பாகங்களிலும் தொழிற்சாலைகள் உருவாகி வளர்ந்து வருகின்றன. சென்ற நூற்றாண்டில் மேற்கு நாடுகளில் தொழில்துறைகள் வளர வாரம்பித்தன. ஆனால் இந்த நூற்றாண்டில் தொழில் நுணுக்கங்கள் முன்னேறி வருகின்றன. முற்காலத்தில் பதினைந்து மணி நேரம் வேலைசெய்த தொழிலாளர் பகல் என்றால் என்ன என்றே அறியவில்லை. இருட்டறைகளிலும் சுரங்கக் குகைகளிலும் இடுப்பொடிய வேலை செய்தார்கள். அந்தப் பழஞ்சலிப்பை நினைத்து இனி வருந்தத் தேவையில்லை. அந்தத் தொழில்துறைகளை ஆரம்பித்த முதலாளிகளையும் தொழில் நுணுக்கங்கண்ட விஞ்ஞானிகளையும் நினைப்பதும் நல்லதாகும். அந்த நினைப்பில் எங்கள் இளைஞரும் தொழில் மேதைகளாக உருப்பெறுதல் வேண்டும். நம் நாடு தொழில்வளமும் சிறந்து வளரவேண்டும்.

எம் முந்தையோர் திரவியந்தேடுதலில் பெரு முயற்சி செய்தனர். திரைகடலோடியும் திரவியந்தேடு என்னும் பழமொழியை நாமறிவோம். திரவியங்களைக் கடலிலும், மலையிலும், காட்டிலும், நிலத்திலும் கண்டெடுத்தார்கள். நிலத்தைத் தோண்டிச் சுரங்கங்களின் வழி கனிப்பொருள் கண்டனர். கடலில் மூழ்கி முத்து, சங்கு, அம்பர் எடுத்தனர். இத்தகைய முயற்சிகளில் மாடு, குதிரை, யானை முதலிய மிருகங்களைப்போல மனிதரை ஈடுபடுத்தினர். எல்லாம் மனித சக்தியாகவே இருந்தது. குறைந்த சக்தியைக் கொண்டு அதிக வேலையையும், குறைந்த கூலியைக் கொண்டு கூடிய வேலையையும் செய்ய வேண்டும் என்னும் எண்ணம் மனிதனுக்கு இயல்பாகவே இருந்தது.

இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேமனி, பெல்ஜியம் ஸ்பெயின் முதலிய நாட்டவர் ஆபிரிக்காவைச் சூறையாடி அங்குள்ள மனிதரைக் குதிரை, மாடு, யானை எனவே பழக்கினர். உரோமப்பேரரசர் ஒருவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் 4000 அடிமைகளைக் கொண்டு தன் வேலைகளைச் செய்வித்தார். மனித உழைப்பைக் குறைப்பதற்கு மாடுகளையும் குதிரைகளையும் யானைகளையும் பழக்கினார்கள். குதிரைகள் நன்றாக வேலைசெய்தன. எனவே குதிரையின் சக்தி ஓர் அளவு அநுமானமாகவும் கணிக்கப்படலாயிற்று.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறிவாளிகள் காற்று, நீராவி சக்தியுள்ளன என்று கண்டார்கள். இந்தியப் பண்பாட்டில் வாயுபகவான், வருணபகவான், அக்கினி பகவான் என்றெல்லாம் அத்தகைய சக்தியை மதித்தார்கள். உரோமர் காற்றுத்தேவதையை அயோலஸ் என்பர்.

இன்று நெம்புக்கோல், கப்பி, உருளை, ஆப்பு, சக்கரம் முதலிய கருவிகளின் உபயோகத்தை எங்கும் காண்கிறோம். இவையைப்பற்றி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறிஸ்ரோட்டில் (கி. மு. 384 - கி. மு. 322) குறிப்பிட்டுள்ளார். அறிஸ்ரோட்டிலைப் போலக் கிரேக்க நாட்டவரான ஆர்க்கிமிடிஸ் (கி. மு. 287 - கி. மு. 212) திருகாணி சுழலும் குழாய் முதலியவற்றைக் கண்டார். நாம் உபயோகிக்கும் கப்பி அக்காலத்திலேயே பயன்பட்டது. இதை ஆர்க்கிமீடிஸ் தூக்குக் கருவி எனக் குறிப்பிட்டுள்ளார்.

இன்று சக்கரங்கள் வண்டி வாகனங்களிலும் இயந்திரங்களிலும் உபயோகமாகின்றன. கடிகாரம் முதலிய சிறிய கருவிகளிலும் சக்கரங்கள் உள்ளன. ஆனால் சக்கரத்தைப் பற்றி அறியாத மக்கள் சறுக்கு வண்டிகளை உபயோகித்தனர். எகிப்தில் 887 தொன் நிறையுள்ள கற்பாறையை 100 மைல் தூரத்துக்கு 2000 அடிமைகள் இழுத்துச் சென்றனர். தஞ்சாவூரில் 80 தொன் கருங்கல்லை மேலே எடுத்துப் போவதற்குப் பத்துமைல் தூரம் சாய்வுத்தளம் அமைத்தான் இராசராசசோழப் பேரரசன் ★

# அருள் விருந்து

ஆதாரம்: தர்மசக்கரம்.

1, சோம்பலிற் கிடப்பது பெரிய பாபச்செயல்
2. அகத்தூய்மையும் ஆத்மஞானமும் இணையானவை
3. தன்னடக்கம் உள்ளவனுக்குத் துயரங்கள் இல்லை
4. இடையறாத பணிவிடை பக்தியை வளர்க்கிறது
5. மனபரிபாகத்தால் மனிதன் மேலானவனாகிறான்
6. தெய்வத் திருநாமத்தால் உள்ளம் தூய்மையாகும்
7. நல்ல எண்ணம் உயர்நிலைக்கு அத்திபாரம்
8. மௌனத்தால் கோபத்தைத் தணிக்கலாம்
9. தியானத்தால் புறவுலகச் சந்தடிகள் நீங்கும்
10. இறைவன் செயலை அறிந்தவன் இறுமாப்புக் [கொள்ளான்

## கடோப நிஷதம்

அறிவைச் சாரதியாகவும் அடங்கிய மனதைக் கடிவாளமாகவும் உடைய மனிதன் பயணத்தின் முடிவாகிய விஷ்ணுவின் மேலான பதத்தை அடையப்பெறுகிறான். ★

## அல்லீறும் பிறவுமான இலக்கியச் சொற்கள்

| | | |
|---|---|---|
| தொடை | — | தொடையல் |
| வளை | — | வளையல் |
| பிழி | — | பிழியல் |
| திரை | — | திரையல் |
| முதை | — | முதையல் |
| வறை | — | வறையல் |
| பொரி | — | பொரியல் |
| துவை | — | துவையல் |

## ஊர்ப்பெயர் வரிசை

எமது பிரதேசத்தில் ''ஆலை'' என்னும் முடிபுள்ள ஊர்ப்பெயர்கள் பல. பன்னாலை, இளவாலை, சில்லாலை, பொன்னாலை, தன்னாலை, ஏழாலை, அரியாலை, தல்லாலை, சரசாலை, மீசாலை, தம்பாலை, மாப்பிளாலை, திக்காலை என்பனவும் பிறவுமாம்.

★ நல்லறிவினின்றும் விளைவது பண்பு ★

# நாவலர் நினைவுகள்



ஆறுமுகநாவலர் அவர்கள் 1879 ஆம் ஆண்டிறுதியில் மறைந்த பின்னர், 1888 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை ஆரம்பிக்கப் பெற்றது.

நாவலரின் சகோதரரின் மைந்தர் த. கைலாசபிள்ளை அவர்களும், சகோதரியாரின் மைந்தர் ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்களும் இன்னும் நாவலர் அவர்களின் ஞான பரம்பரையில் வந்த சிலரும் சபையை ஆரம்பித்து நடத்தி வந்தார்கள். அடுத்த ஆண்டில் பசுபதிச்செட்டியார் அவர்கள், நீதியரசர் செல்லப்பாபிள்ளை அவர்கள், அப்புக்காத்தர் நாகலிங்கம் அவர்கள், நியாயதுரந்தரர் காசிப்பிள்ளை அவர்கள் முதலானோர் சபையுள் அங்கத்தவர்களாய்ச் சேர்ந்தார்கள்,

நாவலர் அவர்களின் வழியில் தமிழ் மொழியையும் சைவ சமயத்தையும் வளர்த்தலே சபையின் முக்கிய நோக்கமாகக் கருதப்பட்டது. பத்திரிகை நடத்துதல், சைவப் பிரசாரஞ் செய்தல், பாடசாலைகளை நிறுவிச் சைவ சமயத்துறையில் கல்வி கற்பித்தல் முதலியன அவர்களின் நோக்கமாகும்.

சைவ பரிபாலன சபையார் அக்காலத்திற் செய்து வந்த மகத்தான தொண்டுகள் ஒருபுறமாக நாவலரின் மாணவர் பலர் தத்தம் ஊர்களில் ஞானபரம்பரையினைப் பேணி வளர்த்து வந்தார்கள். முன்சொன்ன வை. ஆறுமுகப்பிள்ளை என்னும் முகத்தாரின் தமையனார் சின்னத்தம்பியார் கந்தமடத்தில் புகையிலை சுருட்டு வர்த்தகர். அவர் தமது மைந்தன் சிவகுருநாதன் ஆறுமுகநாவலர் பரம்பரைக் கல்வி பயிலுதல் வேண்டும் எனவிரும்பித் தம் மாளிகையில் ஒரு புறத்தில் கம்பளம் விரித்து, திண்டு தலையணை விசிறி குடிநீர்க் கூசா முதலிய உபசாரங்கள் வைத்து, வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்களை வீட்டுக்கு அழைப்பித்துப் பாடஞ் சொல்லவைத்தவர்.

செல்லப்பிள்ளையான சிவகுருநாதர் பொன்னம்பலபிள்ளை அவர்களிடம் கையாலும் காலாலும் வாங்கிக் கட்டியதுண்டு. தம் மகனைத் தண்டித்த வித்துவ சிரோமணி அவர்களை என்றைக்காவது சின்னத்தம்பியார் நொந்தது கிடையாது. சிவகுருநாதன் படிப்பதற்குப் பக்கத்துணையாக அயலில் வாழ்ந்த மூவர் வந்துசேர்ந்தார்கள். அவர்களில் ஒருவர் சிறிதளவு படித்ததோடு விலகித் தம் பிழைப்புக்கான தொழிலை நாடிப் பிரிந்து போய்விட்டார். அவ்ரின் திறமை அதிகம் பிரகாசிக்கவில்லை. அவர் கதிரவேலு சின்னையா என்பவர். அவர் அக்காலத்தில் வாங்கி வைத்த நாவலர் பதிப்புக்கள் பல அவரின் மைந்தன், இதனை எழுதுவதற்கு உதவியாயிருந்தன. ஒருவர் வண்ணார்பண்ணை சைவத் தம்பியப்பா எனப்புகழ்பெற்ற புராணபடனக்காரரர் மற்றவர் தம்பையா உபாத்தியாயர் என்று பெயர் வழங்கிய சுவாமிநாத பண்டிதர் அவர்கள். சுவாமிநாத பண்டிதர் அவர்கள் சென்னை, மதுரை, திருச்செந்தூர், சிதம்பரம் முதலிய தலங்களிலே தங்கித் தமிழும் சைவமும் வளர்த்தவர். தமிழ்நாட்டுத் திருத்தலங்களில் உற்சவங்கள் நிகழுங் காலங்களில் ஆங்காங்கே சென்று பிராகாரங்களில் சைவப் பிரசங்கங்கள் செய்தவர். ஒலிபெருக்கி இயந்திரம் கிடையாத அந்தக்காலத்தில் உரத்துப் பேசிப் பல்லாயிரவர் மத்தியில் புகழ்பெற்றவர்.

தேவாரத் திருமுறைகளை அடங்கன்முறை என்னும் பெயரில் தலவரிசை தவருமல் எழுத்துப்பிழையில்லாமல் சுத்தப் பதிப்பாக முதன்முதலாக வெளியிட்டவர். சுவாமிநாதபண்டிதர் பதிப்பு என்றல் படித்தவர்கள் மத்தியில் பெருமதிப்பு நிலவியகாலம் அது.

சுவாமிநாதபண்டிதர் சைவசித்தாந்த சமாஜத்தின் ஆண்டு விழாக்களில் தலைமைதாங்கிய சிறப்பும் பெற்றவர். வேதத்தைப் புறக்கணிப்போரைத் துரோகிகள் என்று உரத்துக்கூறித் தெருட்டி வைதிகத்தை நிலவச்செய்தவர்.

— தொடரும்

முற்றொடர்:

## இலக்கியச் சொல்வரிசை

| | | |
|---|---|---|
| 51. | அபத்தம் | — பொய், தவறு |
| 52. | அபயன் | — பயமில்லாதவன் |
| 53. | அபிவிருத்தி | — மிக வளர்தல் |
| 54. | அம்புராசி | — கடல் |
| 55. | அமளி | — படுக்கை |
| 56. | அர்ப்பணம் | — ஒப்பித்தல் |
| 57. | அரமியம் | — நிலா முற்றம் |
| 58. | அருட்குறி | — சிவலிங்கம் |
| 59. | அல்லகண்டம் | — துன்பம் |
| 60. | அலக்கண் | — துன்பம் |
| 61. | அலமரல் | — துயருறல் |
| 62. | அவ்வியம் | — பொருமை |
| 63. | அவகடம் | — வஞ்சகம் |
| 64. | அவத்தம் | — பொய் |
| 65. | அவத்தை | — நிலை |
| 66. | அவித்தை | — ஆணவமலம் |
| 67. | அழுக்காறு | — மனவழுக்கு |
| 68. | அறன்கடை | — பாவம் |
| 69. | அறிதுயில் | — யோக நித்திரை |
| 70. | அறுபதம் | — வண்டு |
| 71. | அறுவை | — சீலை |
| 72. | அன்னணம் | — அப்படி |
| 73. | அன்னவம் | — சமுத்திரம் |
| 74. | அனந்தல் | — நித்திரை |
| 75. | அனுங்கல் | — வாடுதல் |

— தொடரும்

**★ பிரார்த்தனை பண்ணுகிறவாய் புனிதவாய் ★**

முற்றொடர்:

# சேர்.முத்துக்குமாரசுவாமி

சேர். முத்துக்குமாரசுவாமி சென்ற நூற்றுண்டிலே முடிசூடா மன்னராக விளங்கியவர். அவர் இலங்கைச் சட்டசபையிலே தமிழ்ப்பேசும் மக்களின் ஏகப் பிரதிநிதியாயிருந்ததோடு, ஆங்கிலேய ஆட்சிக்காலத்து எதிர்க்கட்சித் தலைவராயும் இருந்தவர். அக்காலத்தில் சட்டசபையில் நியமனம் பெற்ற உத்தியோக அங்கத்தவர் (officials) ஆளுங் கட்சியினராயும், உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர் (unofficials) எதிர்க்கட்சியினருமாயிருந்தனர். எதிர்க்கட்சி வரிசையில் ஜோஜ்வால் முதலிய ஆங்கிலப் பெரியார்களும் லோறனஸ் முதலிய பறங்கியரும் அலங்கரித்தனர். அவர்களுள் சேர் முத்துக்குமாரசுவாமி தமிழ்ப் பண்பாட்டைப் பிரதிபலித்துக்கொண்டே உலகம் புகழ வாழ்ந்தவர். அவரைத் தென் கிழக்காசிய நாடுகளும் ஐரோப்பிய நாடுகளும் நன்கறிந்திருந்தன; இங்கிலாந்தில் புகழ்பெற்ற பிரதம மந்திரிகளும் எதிர்க்கட்சித் தலைவர்களும் அவரை நட்புரிமையோடு கொண்டாடினர். மாட்சிமைமிக்க விக்ரோரிய மகாராணியார் முத்துக்குமாரசுவாமியை நேரில் பழக்கமானவர். சேர். முத்துக்குமாரசுவாமியின் தந்தை ஆறுமுகத்தா பிள்ளை குமாரசுவாமி என்பார் ஆங்கிலேயத் தேசாதிபதிகளை நன்கறிந்தவர். ஆங்கிலேயர் கண்டியைப் பிடித்தபின் நிகழ்ந்த வைபவங்களில் கண்டியரசனைக் கண்ணியமாக நடத்த வேண்டும் என்று வற்புறுத்தியவர்.

சேர் முத்துக்குமாரசுவாமி சட்டசபையில் பிரதிநிதியாயிருந்தபோது ஆறுமுகநாவலரின் அந்தரங்க ஆலோசனைகளைக் கேட்டுச் சைவப் பெருமகனாகவே வாழ்ந்தவர். அவரின் போக்கை நேரிலறிந்த சுவாமி விவேகானந்தர் அவரை இந்துக்களின் முதற்பெருந் தலைவர் எனக் கொண்டாடினர்.

சேர் முத்துக்குமாரசுவாமி பிரித்தானிய மந்திரிகளோடு நெருங்கிப் பழகியவர் என்றதாலும், அவர் தனிப்பெருங் குணசீலன் என்பதாலும் இலங்கையில் ஆட்சிசெய்த தேசாதிபதிகள் பலர் அவரை வெகுவாசக் கௌரவித்தனர். எத்தனையோ சட்டநிறைவேற்று வைபவங்களில் அவர் அநியாயத்தைத் தனியொருவராக நின்று எதிர்த்து வாக்களித்ததும் உண்டு.

சேர். முத்துக்குமாரசுவாமி அவர்கள் வேண்டுமென்றே மேற்குத்தேய நாகரிகத்தை மேற்கொண்டு வெள்ளைக்காரரை விஞ்சி விளங்கினர். அவர் எல்லோருக்கும் முன்மாதிரியாய் விளங்கியதால் அவரை எல்லோரும் சேர்முத்து என்றே புகழ்ந்தனர். இராமன் வாழுமிடம் அயோத்தி என்றூற்போல முத்து வாழ்ந்தவிடம் அறிவாளிகளின் நகரமாய் விளங்கிற்று.

## அருமையான வரலாறு

சேர் முத்துக்குமாரசுவாமி அவர்களைப்பற்றி சிங்கப்பூர் துரைராசசிங்கம் ஆங்கிலத்தில் அருமையாக எழுதியுள்ளார்கள். இந்நூலைப் பேராசிரியர் கலாநிதி E. F. C. லுடவைக் அதிகமாகப் பாராட்டியுள்ளார். இது இலங்கை வரலாற்றுப் பெட்டகத்தக்குப் பெரிய உபகரிப்பு என்பர். இது பாரம் பரியந்தழுவியெழுதப் பெற்றது என்றும், பண்பாட்டைப் பிரகாசிக்கச் செய்வது என்றும் புகழுவர்.

இந்துப் பண்பாட்டையும் இலங்கைச் சமூக திருத்தத்தையும் கருத்திற்கொண்டு செயலாற்றிய சேர். முத்துக்குமாரசுவாமி அவர்களின் வரலாற்றைத் துரைராசசிங்கம் அவர்கள் திறமையாகச் சித்திரித்துள்ளார்கள் என்பர். சேர். முத்துக்குமாரசுவாமி அவர்கள் ஒரு தமிழன் என்பதை எவரும் மறந்துவிடலாகாது என்பது பேராசிரியர் லுடவைக் அவர்களின் ஆணித்தரமான எழுத்து.

அன்பர் துரைராசசிங்கம் அவர்கள் பெற்ற பெருமை வரிசையில் ஒன்று, அவர் சேர் முத்து அவர்களைப்பற்றி, எழுதியவற்றில் ஒருபகுதியை சேர். முத்துக்குமாரசுவாமி அவர்களின் புகழ்பூத்த மைந்தன் திருத்திக்கொடுத்தார் என்பதாகும்.

சேர். முத்துக்குமாரசுவாமி அவர்களின் மறைவு குறிக்கும் நூற்றுண்டை வெகுவாக நினைவுகொள்ள வேண்டும் என்பது துரைராசசிங்கம் ஐயாவின் விருப்பம். அவர் தமது விருப்பத்தை அங்கிருந்து எழுதியுள்ளார். நாம் இயன்றவரை சேர் முத்துவை நினைவு செய்வோம்.

சேர் முத்து 1879 ஆம் ஆண்டு மே மாதம் நான்காம் திகதி முதுமை காணுமுன்பே மறைந்தார் அவரின் மறைவை அறிந்து ஆறுமுகநாவலர் வெகுவாக வருந்தினர். தமது சைவப்பிரகாச வித்தியாசாலையில் 1879-6-7 இல் கூட்டிய கூட்டத்தில் D. C. விசுவநாதபிள்ளையின் தலைமையில் இரங்கல் உரை நிகழ்த்தினர். அக் கூட்டத்துக்கு மானிப்பாயைச் சேர்ந்த லோட்டன் என்பவர் காரியதரிசியாயிருந்தார். லோட்டன் அவர்கள் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் முந்தையோராவர்.

சேர். முத்துக்குமாரசுவாமியின் பிரிவு வட்டுக்கோட்டைப் பெரியார் முத்துக்குமாரு சிதம்பரப்பிள்ளை என்னும் பெரிய நெவின்ஸ் அவர்களை வெகுவாகக் கலக்கிவிட்டது. அவர் கையறு நிலையிற் பாடிய பாடல்கள் அக்காலத்தில் பிரபலமாயிருந்த இலங்கை நேசன் பத்திரிகையில் வெளிவந்தது. இலங்கை நேசன் பத்திராதிபர் சின்னத்தம்பி என்பவர் சுந்தபடத்து அம்மன் வீதியில் வாழ்ந்தவர். ஆறுமுகநாவலர் மீது அபிமானங்கொண்டவர். உடுப்பிட்டியைப் பிறந்தவூராகக் கொண்டவர். வைமன் கதிரைவேற்பிள்ளையின் குடும்பத்தவர்.

நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை அவர்களின் பாடல்கள் நீளமானவை. அவற்றுள் முதலில் வருகின்ற ஒரு வெண்பாவை இப்போது படிப்போம். எஞ்சியவற்றைத் தொடர்ந்து பின்னர் படிக்கலாம்.

தென்னிலங்கை வள்ளல் ஸ்றி குமாரசு வாமிநற்
றென்னுந் தமிழ்மரபார் இந்திரனைப் — பின்னுதவா
மாகொடிய காலன் வசங்கொண்டான் ஐயையோ
ஆகடியம்! ஆகடியம்! ஆ!!

— தொடரும்

இரணைமடு


## ஸ்ரீ கனகாம்பிகை அம்பாள் பொங்கல்

சித்திரா பூரணைதோறும் நடைபெறும் பொங்கல் விழா வழமைபோல் வெகு சிறப்பாக நடைபெறும் என்று ஆலய பரிபாலன சபையார் அம்பிகை அடியார்களுக்கு அறியத் தருகிறார்கள். தகவல் தருபவர் காரியதரிசி க. மகேசன் அவர்கள். ★

★ சுயநலமுள்ள இடத்தில் அச்சமும் இருக்கும் ★

முற்றொடர்:

## சூரிய நமஸ்காரம்



### திருநாமாவலி மகிமை

சூரியனின் திருநாமங்களில் தினகா, திவாகா, தினக்ருத் திவஸகர, அஹஸ்கர என்பன அவன் பகலை உண்டாக்கு பவன் என்னும் கருத்துள்ளவையாகும். அன்றி பிரபாகர, விபாகர, பாஸ்கர என்பன ஒளியை உண்டாக்குபவன் என்னும் பொருள் பொதிந்தனவாகும். இன்னும் விவஸ் வான், கிரணமாலீ, கபஸ்தி மாலீ என்பன கதிர்களை உடை யவன் என்னும் கருத்துள்ளனவாகும். இவற்றைவிட ஸஹஸ்ரகிரண, ஸஹஸ்ரரச்மி என்பன அவன் ஆயிரம் கதிருள்ளவன் என்பதைக் குறிப்பனவாகும். உஸ்ணும்சு, சண்டதிதி என்பன வெம்மை பொருந்திய கதிர்களையுடை யவன் என்னும் கருத்தினை உடையனவாகும். சித்ரபானு என்னும் பெயர் அவன் பல நிறங்கள் பொருந்திய கதிர் களை உடையவன் எனப் பொருள் தருவதாகும். துவாத சாத்மா என்றால் பன்னிரண்டு ருபமுள்ளவன் என்பதைக் குறிப்பதாகும்.

### சூரியநாராயண அஷ்டோத்தரம்

சூரிய நாராயண பூஜா விதானத்தில் நூறு பெயர்கள்-சதநாமாவளி கூறப்பட்டுள்ளன. அவற்றுள் ஆதி பூதாய, அகிலாகமவேதிய, ஈசாய, வீராய, ஐஸ்வர்யதாய, சர்வாய, அமரேசாய, பரமாத்மனே, நித்தியானந்தாய முதலிய மந்திரங்கள் சூரியபகவானின் பரத்துவத்தை அருமையாகக் கூறுகின்றன.

— தொடரும்

முற்றொடர்:

## இராதாகிருஷ்ணன் கண்ட இந்து தருமம்

இந்து தருமத்தில் ஞானகாண்டம், பக்திகாண்டம், கிரியாகாண்டம் என்பன மூன்று வழிகள். கர்மமார்க்கத் தில் ஆச்சிரமநெறிகள் விதிக்கப்பட்டுள்ளன. பிரம்மச்சரியம் என்பது பயிற்சிபெறும் மாணவ நிலை. கார்ஹஸ்த்யம் என்பது இல்லறத்தை மேற்கொண்டு அறவழியில் வாழ்தல். வானப்பிரஸ்தம் என்பது சமூக பந்தங்களினின்றும் விடு பட்டு ஒதுங்கி வனத்தில் வாழ்தல். சந்யாசம் என்பது பரனை நினைந்து துறவற வாழ்வு வாழ்தல். இந் நான்கு நிலை தழுவிய வாழ்வு நல்வாழ்வு. அநுபவ வாழ்வு.

பிரமச்சரிய நிலை உடலுக்கும் உள்ளத்துக்கும் உறுதி பயக்கும் பயிற்சிப் பருவமாகும். விவாகம் என்னும் திரு மணம் ஆணையும் பெண்ணையும் இணைக்கும் ஒரு புனித இணைப்பு. அது ஒரு கடமையுமாகும். மனிதருக்கு விதிக் கப்பட்ட சற்கருமங்கள் எனப்படும் சம்ஸ்காரங்களும் திரு மணமும் ஒன்று. அது வெறும் உடல் சம்பந்தம் அன்று. இருவரின் இணைப்பு சிந்தனையாலும் செயலாலும் நெருக்க முற்றுக் கற்புநெறியை வகுப்பது. ஆத்மீக வளர்ச்சிக்கு உகந்தது. ஆத்மீகசக்தி விரிவடையவும் குடும்ப லட்சியம் நீடிப்பதற்கும் திருமண முறை விதிக்கப்பட்டது. இருவரும் இணைந்து நெருங்கிக் கலந்து புல்லிப் புணர்ந்து மேலான லட்சியத்துக்கு உழைத்தல் வேண்டும். கட்டுப்பாட்டாலும் பொறுமையினாலும் இருவரும் தம்காதலைத் தெய்விக நிலைக்கு உயர்த்திவிடுதல் வேண்டும். அது ஒரு தாரமுறையில் அமைதல் நன்று.

திருமண முறையின் அமைந்த ஆத்மலட்சியம் கணவன் மனைவி முறையைச் சிதைபவிடாது காத்து வருகிறது. மனைவிக்குச் சகதர்மிணி என்று பெயர். அவள் கணவனுக்கு உறுதுணையாய் நிற்பவள். அவள் உலகத்துக்கு உபகரிக்கும் அதியற்புத உபகரிப்பு நன்மக்கள். அவர்கள் அவளின் வயிற்றில் இருந்து வந்த மணிகள். குழந்தைகளை ஊட்டி வளர்த்து மனிதராக்கும் மாண்புமிக்க பொறுப்பு தாய் மேலதாய் இருந்ததால் அக்காலத்துத் தாய் பொருள் தேடு வதற்குப் புலம் பெயர்ந்து போவதில்லை.

வாழ்வின் இறுதிப்பகுதியில் மனிதன் தனியனாய் நடந்து கொள்கிறான். அவன் தனக்கென வாழாது, தன் ஆத்மசக்தி மூலம் உலகமுய்ய வாழ்கின்றான். அவன் யாதும் ஊரே யாவரும் கேளிர் என வாழ்பவன். சமதா சர்வஸ்மின் என உலாவுபவன். அவன் எவரையும் சமமானவராகவும் தம்மவ ராகவும் கொள்பவன்.

- தொடரும்

## வண்ணை அரசடி விநாயகர் அலங்கார உற்சவம்

மில்க்வைற் நுழைவாயிலிலுள்ள பொள்ளாப்பிள்ளை யார் அலங்கார உற்சவத்தின் ஐந்தாம் நாள் திருவிழா 24-4-79 செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடைபெற்றது. தொழிலதிபரின் உபயமாக நடைபெற்ற விழாவின்போது நல்லையாதீன முதல்வர் தெய்வம் துணை என்பதுபற்றிப் பேசினார்கள். பண்ணிசைச் செல்வன் எஸ். ஆர். திருஞான சம்பந்தன் பண்ணிசைக் கச்சேரி செய்தார்கள். சாந்தி அச்சக அதிபர் புதுவதாகச் செய்துதவிய வெள்ளானை வாகனத்தில் சுவாமி வீதிவலம் வந்தார். ★

### காசிவாசி செந்திநாதையர் நினைவுவிழா

குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலய முன்பக்கலில் 27-4-79 வெள்ளிக்கிழமை நடை பெற்ற விழாவில் மில்க்வைற் தொழிலதிபர் மங்கல விளக்கேற்றிவைத்தார்.

★ மனத்தை வென்றவன் முனிவன் ஆகின்றான் ★

# காசிவாசி செந்திநாதையர்



அந்தணரின் மேம்பட்ட அப்பூதியடிகள் நாயனுரைப் போலத் தம் காலத்தில் தவத்தாலும் படிப்பாலும் பணியாலும் மேம்பட்ட மறையவர் திலகம் மகான் செந்திநாதையர் அவர்கள். பத்தாண்டுக் காலம் காசியில் வாழ்ந்து வேத வேதாங்கங்களை நன்குணர்ந்தவராகையால் இவரைக் காசிவாசி செந்திநாதயோகி எனப் பெரியவர்கள் போற்றினுர்கள்.

காசியிலேயன்றித் திருப்பரங்குன்றம், சென்னை, திருவாங்கூர் முதலிய தலங்களிலேயும் வாழ்ந்து சைவத் தொண்டு செய்தவர் செந்திநாதகுரு. அவர் நாற்பத்தைந்துக்கு மேற்பட்ட நூல்களைச் செய்துள்ளார், மதிப்புமிக்க இந்நூல்கள் ஒவ்வொன்றுக்கும் அவருக்கு ஒவ்வொரு கலாநிதி பட்டம் அளிக்கலாம் என்று கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் எப்பவோ கருதினுர்கள்.

## தேவாரம் வேதசாரம்

மகான் செந்திநாதையர் செய்த தேவாரம் வேதசாரம் என்னும் நூலில் நூற்றுக்கணக்கான வேத சுலோகங்களில் உள்ள சாரம் திருமுறையமுதமான தேவாரத் திருப்பதிகங்களிலும் செறிந்திருப்பதையும், வேதரிஷிகள் கண்ட காட்சியைத் தேவார முதலிகளும் கண்டார்கள் என்றும் தாம் கண்டு எங்களுக்குக் காட்டியுள்ளார்.

## சைவ பாடியம்

வேதங்களை நான்காகத் தொகுத்தவரும், வேதவாக்கியப் பொருளை வலியுறுத்தற் பொருட்டு ஐந்தாம் வேதம் எனப் போற்றப்பெறும் மகா பாரதத்தைச் செய்தவரும், அது போதாதென்று பதினெண் புராணங்களை அருளியவருமான வியாசபகவான் முடிவில் ஒரு பெருநூலைச் செய்தார். அது பிரம சூத்திரம் எனப் பெயர் பெறுவது.

பிரம சூத்திரத்துக்கு முதலில் பாடியம் என்னும் விளக்கவுரை செய்தவர் நீலகண்ட சிவாசாரியர். அவர் வேதங்களுக்கும் ஆகமங்களுக்கும் பேதங்கணிடிலேம் என்று பல சான்றுகள் காட்டியவர். நீலகண்ட சிவாசாரியார் வடமொழியில் எழுதிய பாடியத்தைத் தமிழ் நாட்டார் பலரும் படித்துப் பயன்பெறுதல் வேண்டும் என்று பரோபகார சிந்தனை செய்தவர் செந்திநாதையர். அவர் அந்நூலை அழகு தமிழில் ஆணித்தரமாக மொழிபெயர்த்து 644 பக்கங்கள் உள்ள பெருநூலாக 1908ஆம் ஆண்டில் திருப்பரங்குன்றத்திலிருந்து வெளியிட்டார்கள்.

நீலகண்ட சிவாசாரியரை இவர் பிரம சூத்திரத்துக்குச் சத்தியார்த்தஞ் செய்து வைதிக சைவ சமஸ்தாபனஞ் செய்த பரமாசாரியர் என்பர். அவர் வரைந்தருளிய சைவ பாடியம் சைவசித்தாந்தத்துக்கு ஓர் பேரரணாய் ஓங்கியது என்பர். சீவரத்தினமாய சிவசப்தங்களால் மிகுதியும் புனையப்பெறும் பொலிவினையுற்றது என்பர்.

திராவிட வேதங்களாய தேவார திருவாசக முதலிய அருட்பாக்களின் உண்மைப் பொருள்களைத் தன்னுள்ளே விளங்கக்காட்டும் இயற்கையுடையது. சைவ சித்தாந்த சாஸ்திர தத்துவப் பொருள்களைத் தன்னுள்ளே இலங்க வைக்குந் தர்ப்பண நிகர்த்தது. தன்னைச் சிரவணஞ் செய்தலாதி ஞான பூசையில் தலைப்பட்டோரை நிதித்தியாசன ஞானயோகத்தில் முதிர்ந்து நிற்ப உந்துவது.

எவ்வுலகுக்கும் மேலாகிய சிவபுரத்தின் கண்ணே தேக வியோக காலத்தில் நீடுவாழச் செய்வது. இத் துணைப்பெரிய அரியபாடியம் வடமொழியிலிருப்பதால் யாவரும் அறிதல் கூடாமையின் இதனைத் தமிழ்வசன நடையில் மொழிபெயர்த்து அச்சிலேற்றிப் பிரகடனஞ் செய்யவேண்டும் என்னும் ஆசை மீதூரப்பெற்றேம்.

அறிவினுலும் பொருளினுலும் மற்றெவ்வாற்ருனும் வலிகுன்றிய எம்போலியருக்கு அங்ஙனம் பிரகடனஞ் செய்தல் பெரிதும் கஷ்டமாயவிடத்தும், பாருக்குள்ளே கலியுகத்திலே கண்ட பரமதெய்வமும், செந்தின்மேய வள்ளி மணுளனுமாகிய செந்திநாத சுவாமியின் திருவருள் வன்மையால் இது முற்றுப்பெற்றதெனச் சிவநேயர் யாவரும் உணர்ந்துகொள்வாராக, என்பது ஐயா அவர்களின் பதிப்புரை.

## வைதிக சுத்தாத்து வித சைவ சித்தாந்த தத்துவப் படம்

ஐயர் அவர்கள் தயாரித்த தத்துவப்படம் தத்துவாதீதனுகிய சிவபெருமானைச் சென்றடையும் நெறியைக் காட்டுவது. கண்ணப்பநாயனுர் அன்பு வழிகாட்ட ஆனையாம் சிவத்தை அடையப் பெருகு சோபானம் கடந்தாற்போலத் திருக்காளத்தி மலையை ஏறிக்கடந்து அன்புருவமானுர். சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்ருதல் இது. இத்தகைய நெறியைப் புலப்படுத்தும் படத்தை ஐயரவர்கள் அரிதிற்றயாரித்தமை பாராட்டற்பாலது. இப் படத்தின் பிரிதிகளை இற்றைக்கு முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் பண்டிதமணி அவர்கள் இலவசமாக விநியோகித்தார்கள்.

## கந்தபுராண நவநீதம்

தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுத்தாற்போல் ஐயரவர்கள் கந்தபுராணப் பாற்கடலைப் பக்தி சிரத்தையோடு கருத்தூன்றிக் கடைந்து அதன் பிண்டப்

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

★ பொருமை உள்ளத்தைக் கெடுக்கின்றது! ★

பொருளாகக் கண்ட வெண்ணெய்த்திரள் கந்தபுராண நவநீதம். நவநீதம் என்பது வெண்ணெய்.

பண்டிதமணி அவர்கள் எழுதிய கந்தபுராணக் கலாசாரம் என்னும் பத்துக் கட்டுரைகளில் நான்கு கட்டுரைகளில் செந்திநாதையர் அவர்களின் முயற்சியைப் பாராட்டுவர். நாவலருக்குப்பின் செந்திநாதையர் அவர்கள் செய்த சேவையளவு வேறெவரும் எங்காயினும் செய்யவில்லை என்பது எல்லோரும் அறிந்த உண்மை.

ஐயர் அவர்கள் 1886ஆம் ஆண்டில் வெளியிட்ட கந்தபுராண நவநீதம் பல காலம் கிடைக்காமல் இருந்தபோது, யாழ்ப்பாணக் கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக் கழகத்தின் தலைவர் திரு. சி. சிவகுருநாதன் M. A. (செட்டியார்) அவர்கள் அதனை அழகாக வெளியிட்டு அடக்க விலையில் வாங்குவதற்கு வசதி செய்துள்ளார்கள்.

## சிவஞானபோத வசனாலங்கார தீபம்

செந்திநாதயோகி செய்த மற்றொரு நூல் சிவஞானபோத வசனாலங்கார தீபம் என்பது. அந்நூலை அண்மையில் மதுரையில் மறுபதிப்பாக வெளியிட்டுள்ளார்கள்.

பல்கலைக்கழகங்கள் தத்துவத்துறையில் அபிமானமும் அக்கறையும் காட்டும் இக்காலத்தில் இந்து நாகரிகம் பயிலுவோர்களுக்கு இன்றியமையாதனவாயுள்ள இவர்தம் நூல்களை வெளியிடுதல் ஏற்றமிகு செயலாகும்.

## உதவிப் பத்திராதிபர்

தமிழ்நாட்டில் திருநெல்வேலியிலிருந்து வெளிவந்த சஜன மனோரஞ்சனி என்னும் பத்திரிகையின் உதவிப் பத்திராதிபராயிருந்து பல தலையங்கங்களும் கட்டுரைகளும் எழுதிவந்தார்.

## சிவபூசை எழுந்தருளச் செய்தல்

ஆறுமுகநாவலர் சிவ பூசை செய்யும்போதெல்லாம் உடனமர்ந்து தேவாரம் பாடிவந்த ஐயர் அவர்கள், உரிய பக்குவம் வந்ததும் தாமும் வேண்டிய தீட்சைவகைகளைப் பெற்று ஆசாரிய அபிஷேகமும் பெற்று அகோரசிவாசாரியார் என்னும் தீட்சா நாமத்தையும் பெற்றார். இது அவருடைய முப்பத்தாறும் ஆண்டுப் பராயத்தில் 1884ஆம் ஆண்டில் திருப்புகலூரில் எழுந்தருளியிருந்த சிவஸ்ரீ சோமசுந்தர சிவாசாரிய சுவாமிகளால் நடத்தப்பெற்றது.

## சித்தாந்த சிகாமணி

ஐயர் அவர்களின் அளப்பரிய சைவ சித்தாந்த உணர்வை அறிந்த சூரியனார் கோவில் ஆதீனத்து ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார தேசிகர் இவருக்குச் சித்தாந்த சிகாமணி என்னும் பட்டத்தை நல்கிப் பாராட்டிப் பாடிய பாடல்களில் ஒன்றைப் படித்து இன்புறலாம்.

நிறைகல்வி தவவொழுக்கஞ் சான்றாண்மை
கண்ணோட்ட நெடுகு மன்பு
பொறைமேன்மைச் சிவஞான முதிர்ச்சியநு
பூதிமுதற் குணங்க ளெல்லாம்
குறையாமல் நிறைசெந்தி நாதமறையோய்
நின்னைக் குறித்து யாமிட்ட
மறைவாய்மைச் சித்தாந்த சிகாமணியாம்
பெயர் பிறர்க்கு வழங்கலாமோ?

## வைதிக சுத்தாத்துவித சைவ வித்தியாசாலை

ஐயர் அவர்கள் திருப்பரங்குன்றத்தில் தம்து பொறுப்பில் வைதிக சுத்தாத்துவித சைவ வித்தியாசாலையைத் தாபித்துப் படிப்பித்து வந்தார்.

## செந்திநாதையசுவாமி யந்திரசாலை

செந்தில் மேவிய கந்தசுவாமியாரின் திருநாமத்தை முன்னிட்டுத் தேவகோட்டைச் செட்டிமாரின் பொருளுதவி கொண்டு 1906ஆம் ஆண்டில் அச்சுக்கூடம் நிறுவிப் பல நூல்களை வெளியிட்டு வந்தார். சைவ சமயத்தை நிலைநாட்டுவதற்கு அக்காலத்துச் சூழ்நிலையில் பல கண்டனக் கட்டுரைகளையும் சிறு நூல்களையும் வெளியிட்டு வந்தார்.

ஞான ரத்தின வளி
சீகாழிப் பெரு வாழ்வின் சீவ காருண்யமாட்சி
சைவ வேதாந்தம்
ஞானபோத விளக்கச் சூறாவளி
சிவனுந் தேவன என்னுந் தீய நாவுக்கு ஆப்பு
வீரபத்திராஸ்திரம்
தாந்திக துண்ட கண்டன கண்டனம்
வச்சிர தண்டம்
மகா உக்கிர வீரபதாஸ்திரம்.

## அமிர்த போதினி

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ் நாட்டிற் சைவம் பரப்பிய பத்திரிகைகளுள் அமிர்த போதினி பெருஞ் சிறப்புப் பெற்றிருந்தது. நெந்திநாதையர் அவர்கள் ஆரம்பித்த இப் பத்திரிகையில் அரிய கட்டுரைகள் பல வெளிவந்தன. ஐயர் அவர்களின் கட்டுரைகளில் அபிமானம் கொண்ட திரு. த. கைலாசபிள்ளை (நாவலரின் தமையனாரின் மைந்தன்) அவர்கள் அவற்றுட் சிலவற்றைத் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

## பேச்சாற்றல்

நாவலர் அவர்களின் மாணவராயிருந்ததோடு அவரின் பாடசாலையில் படிப்பித்துப் பழகியதோடு, அவர் செய்யும் பிரசங்கங்களைத் தவறாது கேட்டுக் குறிப்பெழுதி வைத்த பின்பே உறங்கும் நியமம்பூண்டு பழகிய ஐயர் அவர்கள் நாவலர் வழியிற் பிரசங்கஞ் செய்வதிலும் ஆற்றல் பெற்றிருந்தார். தமிழ்நாட்டுத் திருக்கோயில்களிற் பல பிரசங்கங்கள் செய்துவந்தார். திருப்பேரூரில் உலகெலாமுணர்ந்தோதற் கரியவன் எனத் தொடங்கும் பெரியபுராணச் செய்யுளைப் பீடிகையாகக் கொண்டும், பேரூர்ப் புராணத்தின் அளவாய் அளவதன் அளவாய் என்னும் செய்யுளைப் பீடிகையாகக் கொண்டும் அவர் பேசியவற்றைக் கேட்ட கோயம்புத்தூர் வாசிகள் பலர் பெரிதும் வியந்தனர். கோவை வழக்கறிஞர் C. K. சுப்பிரமணிய முதலியார், வைசியாள் வீதி C. M. இராமச்சந்திரன் செட்டியார் முதலான பெரியார்கள் ஐயர் அவர்களின் ஆற்றலைப்பற்றி இதனை எழுதுபவருக்கு முப்பதாண்டுகளுக்கு முன் கூறினார்கள்.

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்)



## மறக்க முடியாத மாதாஜி

கிழக்கிலங்கையில் திருக்கோணமலையில் வைதிக மணங் கமழச் செய்த மகானுபாவர்களுள் மாதாஜி என வழங்கிய சுவாமி சிவானந்த சச்சிதானந்த என்னும் மாதரசியும் ஒருவர். இற்றைக்கு 27 ஆண்டுகளுக்கு முன்னர் இமயஞ்சார்ந்து சிவானந்தர் அவர்களிடம் சந்நியாசம் பெற்று, சச்சிதானந்த சுவாமி அவர்களையும் அழைத்துக்கொண்டு ஈழந்திரும்பிய அம்மையார், திருக்கோணமலையில் தபோவனம் அமைத்தார்கள். அந்நாளில் மந்திரியாயிருந்த கலாநிதி சுப்பையா நடேசன் அவர்கள் அரசாங்க மரியாதைகளோடு ஆரம்பித்துவைத்த தபோவனம் ஆருமற்ற ஏழைப் பிள்ளைகளுக்குப் புகலிடமாய் நிலவிவருகின்றது.

சாதாரண அன்னைமார்களிலும் பார்க்க மேம்பட்டவராகையால் அந்த உத்தமியை எல்லோரும் மாதாஜி என்றே அன்போடும் பணிவோடும் அழைத்து வந்தார்கள். அதிகாரம் மிடுக்கு பதவி எவையும் அம்மையாரை மிரட்ட முடியாது. எவரையும் அன்போடும் கருணையோடும் வரவேற்று உபசரிக்கும் இயல்புவாய்ந்த அம்மையாரை அதிகாரிகள் வெகுவாக அஞ்சினர்.

இக்காலத்து விப்ரர்கள் பலர் வேதமோதும் முறையைக் கண்டு மனம் வெதும்பிய அம்மையார், பிராமணர் ஒரு சிலரை வடக்கே அனுப்பி வேதம் பயில வசதி செய்வதற்கு முன்வந்தார். ஆனால் விப்ரர்கள் முன்வரவில்லை,

அம்மையார் உவாக்கள் தோறும் தமது ஆச்சிரமத்தில் தீவளர்த்து வேதமோதச் செய்து கேட்டின்புற்று வந்தார். நன்றாக வேதமோதக்கூடிய ஐயர் ஒருவருக்கு எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கிறேன்: ஒருவரைத் தேடித்தா மகனே என்று அவர் மில்க்வைற் தொழிலதிபரைப் பல முறை கேட்டுவந்தார். தொழிலதிபர் பார்க்கலாம் பார்ப்போம் என்று தேடிக்கொடுப்பதற்குள் மாதாஜி மறைந்து விட்டார்,

அம்மையாரின் புகலிடத்தை நாடிப் பெண்களும் குழந்தைகளும் வருவார்கள். ஒருமுறை பிறந்த மேனியோடு இருபது நாளான சிசுவொன்றை யாரோ ஏந்தி வந்து கொடுத்தார்கள். அம்மையார் அந்தச் சிசுவையும் தம் கரத்திலேந்தி வளர்த்தார்கள்.

நாட்டிலுள்ள நல்லவர்கள் பெரியவர்கள் ஆச்சிரமத்துக்கு உதவி செய்வது வழக்கம். எத்தகைய சிறிய உதவியைப் பெறும்போதும் பிள்ளைகள் முகமலர்ச்சியோடு கரங் கூப்பிச் சிரந்தாழ்த்தி வணங்கி நன்றி என்றும், உபகாரம் என்றும் கூறிக் கையேற்பர்.

வெண்சிகப்பு நிறத்துணியில் பெண்குழந்தைகள் தங்கள் பருவத்துக்கேற்ற முறையில் ஆடைகள் தயாரித்து அணிந்து சிவனை மறவாத சிந்தையோடு, திருநீறு தரித்துத் துதிப் பாடல்கள் பாடியும் தங்கள் படிப்பிற் கவனஞ்செலுத்தியும் வருகிறார்கள். பெண் குழந்தைகளைப் பெருமாட்டியராக்குவதற்கு மாதாஜி எடுத்த முயற்சி முற்றுவதற்கிடையில் அவர் மறைந்துவிட்டார்கள்.

சேவை மனப்பான்மையும் தியாக சிந்தையும் கொண்ட மாதர்கள் அங்கே பணிபுரிதல் பெருந்தருமமாகும். ஆச்சிரமத்துக்குப் போதிய விளை நிலமும் தோட்ட நிலமும் உள்ளன. கோடைகாலத்தில் நீர்பாய்ச்சுவதற்கென மாதாஜி தோண்டுவித்த பெரிய கிணறு வற்றாத ஊற்றாகவுள்ளது. பயன் தரும் பாரிய மரங்கள் பல ஆச்சிரம வளவை நிழல் செய்கின்றன. ★

## சதாவதானம் புலோலிப்பிள்ளை

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழநாட்டுக்குப் பெரும் புகழ் தேடித்தந்த கல்விமான்களில் ஒருவரும், தமிழ் நாட்டிற் செயற்கரிய செய்து பெருஞ்சிறப்புப் பெற்றவர்களுள் ஒருவரும், அட்டாவதானம் சதாவதானஞ் செய்த விற்பத்திமான்களில் ஒருவரும், சைவம் காத்த மகாவீரர்களில் ஒருவரும், அடக்கவிலையில் பெரிய நூல்களை அச்சிட்டு வெளியிட்டவர்களில் ஒருவரும், அறிவாற்றல் நிரம்பிய மாணவ பரம்பரையை உருவாக்கியவருள் ஒருவருமாகிய புலோலி தம்பசெட்டி நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் 1871-ஆம் ஆண்டில் தோன்றி 1907-ஆம் ஆண்டில் மறைந்தவர்.

முப்பத்தாறு ஆண்டுப் பராயத்துக்குள்ளேயே மூதறிஞராய் முப்பதுபேர் செய்யவேண்டிய வேலையைத் தனியொருவராய்ச் செய்துமுடித்த பெரியவர் அவர். அவர் தோன்றிய தம்பசெட்டியூரினர் அவருக்கு அழகிய சிலை எடுத்து அவர் நினைவாகச் சனசமூக நிலையந் தாபித்து நாற்பத்தைந்து ஆண்டுகளாக நற்பணி புரிந்துவருகிறார்கள்.

### நினைவு நாள் விழா

சென்ற 16-4-79 திங்கட்கிழமை முன்னாள் நீதிபதி நவரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பெரு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மில்க்வைற் தொழிலதிபர் புலோலிப்பிள்ளையின் சிலைக்கு மாலையிட்டு வணங்கி மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்ததோடு, பலவித போட்டிகளிற் பங்குபற்றிய பிள்ளைகளுக்குப் பரிசு நூல்களையும் உபகரித்து வழங்கிச் சிறப்பித்தார், சொற்பொழிவுகள், கருத்தரங்கம். கலை நிகழ்ச்சி முதலியன நல்லமுறையில் நடைபெற்றன. கதிரைவேற்பிள்ளை போன்ற வீரர்கள் பலர் புலோலியிற் பிறத்தல் வேண்டும். ★

★ மன்னித்தல் தண்டித்தலைவிட மிகவும் மேலானது ★



## ஆனந்தக்குமாரசுவாமி

கலாநிதி, கலாவிநோதர், கலாயோகி என்றெல்லாம் புகழ்பெற்ற ஆனந்தக் கெண்ரிஸ் குமாரசுவாமி அவர்களைப் பற்றிச் சென்ற ஆண்டில் ஐந்தாறு கட்டுரைகளை வெளியிட்டபின், மில்க்வைற் செய்தி இடைநிறுத்தஞ் செய்துவிட்டது.

ஆனந்தக்குமாரசுவாமி அவர்களை உலகறியச் செய்வதில் ஓயாது உழைப்பவர் ஒருவர் மலேசியாவில் உள்ளார். ஐரோப்பியராலும் அமெரிக்கராலும் புகழப்பெற்ற அவரை எல்லோரும் பொஸ்வெல் என்று வழங்குவர். ஆங்கிலப் புலமையில் அரசறிய வாழ்ந்த கலாநிதி யோண்சன் அவர்கள் வரலாற்றை எழுதிப் புகழ்பூத்தவர் பொஸ்வெல் என்ற ஆங்கிலப் புலவர்.

இந்தவகையில் ஆனந்தக்குமாரசுவாமி அவர்களைப் பற்றிய செய்திகள் அத்தனையையும் விடாது தேடித் தொகுத்துப் பெருநூல் செய்து புகழ்பெற்றவர் இன்று மலேசியாவில் வாழ்கின்றார். அவர் அப்பூதிஅடிகள் தம் மைந்தருக்குத் திருநாவுக்கரசு என்று பெயர் வைத்த பான்மையில், தம் மைந்தனுக்கும் ஆனந்தக்குமாரசுவாமி எனப் பெயரிட்டு வழங்குபவர்.

யாழ்ப்பாணத்துப் பொதுசன நூல்நிலயத்தில் ஆனந்தக்குமாரசுவாமி அவர்களின் நூல்கள் அத்தனையையும் அலங்கரிக்கும் வண்ணம் கொடுத்துதவியவர். ஆனந்தக் குமாரசுவாமி அவர்களை மீண்டும் மீண்டும் சிந்தைசெய்வோமாக என்னும் கருத்துள்ள தலைப்பில் அவர் பெருநூல் ஒன்று எழுதியுள்ளார். ஆனந்தரைச் சொன் மாலையால் துதித்துள்ளவர்களுள் அவர் தொகுத்துள்ள பாரிய நூலில் உலகத்தவர் ஆனந்தரைப் போற்றியவகையைக் காட்டியுள்ளார். ஆனந்தர் உலகத்துக்கே உரியவர், உலகத்துக்கே உழைத்தவர். கிழக்கை மேற்குக்கும், மேற்கைக் கிழக்குக்கும் உணர்த்திய உத்தமரை, மேற்றிசைவாணர் மேற்கை மேற்குக்கே உணர்த்திய மேதை எனப் போற்றிசைத்துள்ளார்கள்.

ஆனந்தக்குமாரசுவாமி அவர்களை மீண்டும் மீண்டுஞ் சிந்தைசெய்வோம் என்று எழுதிய பெரியவர் யாரோ எவரோ அல்லர். அவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். சிங்கப்பூரில் ஆசிரியராயிருந்து ஓய்வுபெற்று வாழ்பவர். அவர் பெயர் துரைராசசிங்கம். அவர் நூற்று நாற்பது பெரியார்களின் எண்ணங்களைத் தொகுத்து ஆனந்தக் குமாரசுவாமி அவர்களைச் சிந்தை செய்யவைத்துள்ளார்கள்.

அன்பர் துரைராசசிங்கம் அவர்கள் ஆனந்தக்குமாரசுவாமி அவர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்கள். இவரைப் பற்றி ஆனந்தர் எழுதும்போது Durairajasingbam is a well meaning and Devoted Adherent என்று எழுதியுள்ளார். இவரின் பாரிய வேலைத்திறனை ஆனந்தக்குமாரசுவாமி அவர்களின் பாரியார் தொஞலூசா அம்மையார் வெகுவாகப் பாராட்டியுள்ளார். இன்னும் ஆனந்தக்குமாரசுவாமி அவர்களின் அன்பு மைந்தன் கலாநிதி இராமாகுமாரசுவாமி அவர்களும் இருகலாசாரங்களை விளக்கிய வித்தகர் எனப்பாராட்டியுள்ளார்

அன்பர் துரைராசசிங்கம் அவர்கள் அண்மையில் எழுதிய கடிதம் ஒன்றில் மில்க்வைற் செய்தியில் ஆனந்தரைப் பற்றித் தொடர்ந்து வெளியிடுமாறும், 1979ஆம் ஆண்டு சேர் முத்துக்குமாரசுவாமி அவர்களின் மறைவைக் குறிக்கும் நூற்றுண்டாகலால் அவரைப்பற்றி விரிவாக எழுதி வெளியிடுமாறும் அன்புரிமையோடு எம்மைப் பணித்துள்ளார்கள். நாமும் இயன்றவரை அவர் பணியைச் செய்வோம். வாழ்க ஆனந்தக்குமாரசுவாமி அவர்களின் புகழ்.

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

**காசிவாசி........**

ஐயர் அவர்கள் ஒரு சமயம் தமிழ்நாட்டுத் திருநெல்வேலியில் ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை என்னும் பெரியபுராணச் செய்யுளைப் பீடிகையாகக் கொண்டு திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுரைப் பற்றிப் பேசிய பேச்சின் சாரத்தைக் கதிரேசன் செட்டியார் அவர்கள் எழுதிய ஞானத்தின் திருவுரு என்னும் கட்டுரையிற் கற்றுக்களிக்கலாம். ஐயர் அவர்கள் திருவாலவாய் என்னும் மதுரையில் சைவப் பிரசங்கங்கள் பல புரிந்து பெருஞ்சிறப்புப் பெற்றுர்.


தமிழ் நாடெங்கும் புகழ்பெற்ற ஐயர் அவர்கள் சில காலம் கொழும்பில் தம்பையா சத்திரத்தில் தங்கியிருந்து சைவப் பிரசங்கங்கள் செய்தார்கள்.

இவை ஒவ்வொன்றுக்கு ஒவ்வொருவர் என்னும் தலைப்பில் மில்க்வைற் செய்தி ஆசிரியர் எழுதிவரும் நூலின் ஒரு பகுதியாகும். அவற்றை விரிவஞ்சி இங்கே சுருக்கியுள்ளார். ✯

## சச்சிதானந்த சிறுவர் ஆண்டுவிழா

உடுவில் சச்சிதானந்த சிறுவர் ஆண்டுவிழா 22-4-79 ஞாயிற்றுக்கிழமை கலை நிகழ்ச்சிகளுடன் வெகுசிறப்பாக நடைபெற்றபோது மில்க்வைற் தொழிலதிபர் சிறப்பு விருந்தினராகக் கலந்து உரையாற்றிப் பரிசுகள் வழங்கினுர்கள்.

★ அந்தக் கரணசுத்தியால் அறியாமை அகலும் ★



# சுவாமி விவேகானந்தரின் வருகை

சர்வசமய மாகாநாட்டில் கலந்து இந்து சமயம் பற்றிப் பேசுவதற்காகப் பம்பாயிலிருந்து 20-5-1893 இல் கப்பல் மூலம் புறப்பட்ட சுவாமிகள் 27-5-1893 இல் கொழும்பில் இறங்கி அன்று முழுவதும் அங்கே தங்கினுர். அவர் சாதாரண பிரயாணியாக, எவருக்கும் தம்மை அறிவித்துக் கொள்ளாமல் அடுத்தநாள் பிரயாணத்தைத் தொடர்ந்து மேற்கொண்டார்.

அமெரிக்காவில் வேதாந்த முழக்கஞ் செய்தபின் உலகப் புகழ்பெற்றுத் தாய்நாட்டுக்கு மீண்டபோது 15-1-1897 இல் கொழும்பில் இறங்கியபோது இராசமரியாதைகள் அவரைக் காத்து நின்றன. பத்திரிகைகள் யாவும் அவர் புகழையும் வருகையையும் முதல் தாள்களில் முழக்கித் தெரிவித்தன. உலகப் புகழ்பெற்ற இந்துச் சந்நியாசி இலங்கையில் தங்குவார் என்னும் செய்தி பெரியவர்களை ஒன்றுகூட்டி வரவேற்புக்கு ஆயத்தஞ் செய்யத்தூண்டியது.

கொழும்புப் பிரமுகர்கள் தம்பையா சத்திரத்திற் கூடினுர்கள். பொன் குமாரசுவாமி, சேர். அருணுசலம், தம்பையா, இரத்தினசபாபதி, சொக்கநாதன், செல்லையா, நாகநாதர், இராசேந்திரா, தியாகராசா முதலான பெரியவர்கள் பெருந்தொகை செலவில் அவருக்கு உபசாரஞ் செய்ய ஆயத்தஞ் செய்தார்கள். சுவாமிகள் துறைமுகத்தை அடைந்ததும் அங்கிருந்து கொடி, குடை, ஆலவட்டம் முதலிய விருதுகளோடு வெள்ளைக் குதிரை வண்டிகள் அணி அணியாகத் தொடர்ந்து வர அவரை இன்னிசை முழக்கத்தோடு அழைத்துச் சென்று உபசரித்தனர். பாண்ஸ் வீதியில் அமைக்கப்பெற்றிருந்த பெரிய பந்தலில் உபசாரங்கள் நடைபெற்றன.

தேவாரம் திருவாசகம் முதலிய பஞ்சபுராணங்கள் முறையாக ஓதியபின் ஆரம்பமான நிகழ்ச்சியில் பொன் குமாரசுவாமி அவர்கள் விவேகானந்த சுவாமிகளுக்கு மாலை யிட்டு வணங்கிப் பாராட்டுப் பத்திரம் படித்துக் கொடுத்தார். சுவாமிகள் அங்கிருந்தோர் அனைவரையும் ஆனந்தக் கடலில் தோயுமாறு அரிய பிரசங்கம் செய்து வந்திருந்த மக்களை வணங்கினுர்கள்.

அடுத்தநாள் 16-1-1897 மாலை நடைபெற்ற பொது விழாவில் சுவாமிகள் இந்தியா புண்ணிய பூமி என்னும் பொருள்பற்றி பேசினுர்கள். புளோறல் மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் பொன் குமாரசுவாமி, பொன் இராமநாதன், பொன் அருணுசலம் மேடையை அலங்கரித்தனர். சுவாமிகள் இந்து நாகரிகத்தின் சிறப்பியல்புகளைப் பற்றிப் பேசும்போது சகிப்புத்தன்மையைப்பற்றி அழுத்திப் பேசினுர்கள். பாரதநாடு உலக நாடுகளுக்கெல்லாம் தாய் என்றும் அதைப்பற்றி உலகத்தவர் இன்னும் அறியவேண்டியன பலவுளவென்றும் பேசினுர்கள். அவரின் பேச்சுக்குப் பொன் இராமநாதன் அரிய முறையில் நன்றிதெரிவித்தார். இராமநாதனவர்கள் அக்காலத்தில் சட்டத்துறை நாயகமாகக் கடமையாற்றினுர்.

சுவாமிகள் தமக்குக்கிடைத்த மகத்தான வரவேற்புக்கு நன்றி தெரிவித்தபோது தாம் பெரிய அரசியல் தலைவனல்லன் என்றும், தாம் பெரிய தளபதி அல்லன் என்றும், தாம் பெரிய கோடீஸ்வரன் அல்லன் என்றும் கூறித் தாம் ஒரு பிச்சைக்காரச் சந்நியாசி என்றும். இத்தகைய பிச்சைக்காரத் துறவிக்கு இத்தகைய வரவேற்புப் பெரிது என்றும் இந்து சமயத்தின் மதிப்பு இது என்றும் கூறினுர். இன்னும் சமயம் என்பது தேசத்தின் முதுகெலும்பு போன்றது என்றும், தேசிய இனம் சிட்டாசாரமாய் வாழ்ந்து முன்னேறுவதற்குச் சமயம் அடிப்படையான அவசிய சாதனம் என்றும் கூறினுர்.

நான் அமெரிக்காவில் நல்லமுறையில் பேசிப் புகழ் பெற்று வருவதற்குக் காரணம், என்னில் எத்தகைய சக்தியுமல்ல. அது அன்னை பாரதநாட்டின் பரிசுத்த அன்பேயாகும். இது நான் இருதயபூர்வமாக உங்களுக்குச் சொல்லும் உண்மையாகும். பாரதநாடு புண்ணியபூமி என்பதோடு இங்கே தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோலக் கர்மபூமியுமாகும். பரம்பொருளை நாடித் திரும்பும் ஆன்மாவுக்குப் பாரதபூமி அன்பு, கொடை, இரக்கம், நேயம், அமைதி, தூய்மையாகிய பண்புகளை விளைவிக்கும் தாரகமாகும்.

உலக நாடுகளெல்லாம் பாரத நாட்டுக்குக் கடமைப் பட்டுள்ளன. பொறுமையும் சகிப்புத்தன்மையும் பொருந்திய இந்துசமயம் எல்லோரையும் வாழவைப்பது. கிரேக்கநாடு உருவாக முன்பே பாரதநாடு பல துறைகளிலும் மேம்பட்டு நிலவியது. உரோமப் பேரரசைப்பற்றிய சிந்தனையே உருவாவதன் முன்பாரதநாடு பணிசெய்து நிலவியது. ஆனுல் சீசர்கள் ஆட்சிபுரிந்த அத்தாணி மண்டபங்கள் யாவும் உருக்குலைந்து சிலந்திகள் வலை பின்னும் இடங்களாகத் திகழ்கின்றன. மறுநெறியில் வாழ்ந்த பாரதநாடு இன்றும் வாழ்கின்றது.

பாரதநாடு உலகத்துக்கு இருதயம் போன்றது. இது உண்மை. மற்றத் தேசத்தவருக்குச் சமயம் என்பது வேறு பல தொழில்களிடையே ஒருதொழில். ஆனுல் இந்தியாவில் உள்ளவர்களுக்குச் சமயம் ஒன்றே ஒரேயொரு தொழிலாகும்.

இந்தியரின் தொழில் என்ன என்பதை அவர் தம் நெற்றியில் துலக்கமாகவுள்ள சின்னத்தைக் கொண்டே

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்)

★ உண்மையில் உறுதிபெறுதல் ஆத்மசாதனம் ★

11-ம் பக்கத் தொடர்ச்சி......

அறியலாம். இந்தியர் தமது நாளாந்த வாழ்க்கையின் சுக துக்கங்களைக் கொண்டே தமது கர்மபலனையறிந்து கொள்கின்றனர். அநந்தமயமான முற்காலம் நிகழ்காலத்தைக் காட்டுகிறது. நாம் நிகழ்காலத்தில் நடந்துகொள்ளும் போக்கு நம் எதிர்காலத்தை உருவாக்கும் என்பது நிச்சயம். அரசியல் அதிகாரமோ படைப்பலமோ எங்கள் நோக்கமல்ல. இந்தியாவின் உபகரிப்பு ஆத்மீகமேயன்றி வேறெதுவுமன்று.

இந்த நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் ஸ்கோப்பென்கர் என்னும் ஜேமன் தத்துவ சாஸ்திரி உபநிடதங்களைப் படித்தார். அதுவும் மரபுப்பிழைகளுடன் பாரசீகத்துக்கு மொழி பெயர்க்கப்பட்டு அதிலிருந்து பிறெஞ்சு மொழியில் பெயர்க்கப்பட்டதாகும். உலகில் உபநிடதங்களைவிட உயர்ந்த நூல்களைத் தாமறியவில்லை என்றும் அவை தமது வாழ்வில் ஆறுதலளித்தமைபோல மரணத்திலும் துயரகற்ற வல்லன என்றார். உண்மையில் பாரத நாட்டினர் தங்கள் சமயக்கோட்பாட்டை வாட்பலத்தைக் கொண்டு பிறருக்குப் போதிக்கவில்லை. ஆங்கிலத்தில் அதனைக் கூறுவதானால் Fascination என்றே கூறலாம். அது கவர்ச்சியுட்படுத்துதல் எனப் பொருட்படும். அது சாந்தம் பொறுமை, அமைதிமயமான ஈர்ப்பாகும். யுகங்கள்தோறும் முனிவர்கள் தோன்றி நமது சுற்றாடலுக்கு ஒத்தமுறைகளைப் போதித்துள்ளார்கள்.

எங்கள் இறைவன் ஒரே ஒருவர்தான். படித்தவர்கள் அந்த ஒன்றைப் பல பெயர்களால் வழங்கியுள்ளார்கள். "ஏகம் சத்விப்ராவிபுதா வதந்தி'' பற்பல விடங்களிலும் உற்பத்தியாகிப் பரந்து பாய்ந்துவரும் ஆறுகள் யாவும் ஒரே கடலில் சங்கமிக்கின்றன. ''சிவனே! மக்கள் பலரும் பல வழிகளாலும் வந்து தேவரீரையே அடைகிறார்கள்'' என்பது ஒரு தோத்திரத்தின் உட்பொருளாகும். சிவனை லிங்கத்தில் மாத்திரம் காணலாம் என்பதில்லை. அவர் எங்கும் வியாபித்து எல்லாவற்றிலும் உள்ளார். நாம் அவரை அறிந்தோ அறியாமலோ எவ்வழிகளாகவோ செய்யும் வணக்கத்தை அவர் ஏற்றுக்கொள்ளுகிறார். ★

---


முற்றொடர்:

## இரு நாடுகளின் கதை

இருநாடுகளின் கதையை முதலில் எழுதியவர் வான்மீகி என்னும் முனிவர். அவர் செய்த கதை பாரதநாடு முழுவதும் பரவியிருந்தது. பலர் பல்வேறு மொழிகளில் அக்கதையைத் தங்கள் பிரதேசங்களில் பரவுமாறு செய்தார்கள். அவை ஆனந்தராமாயணம், புசுண்டி ராமாயணம், அத்தியாத்ம ராமாயணம், கம்பராமாயணம், துளசி ராமாயணம் என்பனவும் பிறவுமாம்.

இத்தகைய மொழி பெயர்ப்புகள் வெளிவருவதற்குக் காரணம் மொழி பெயர்ப்பாளர். அக் கதை மீது கொண்ட ஆசையும், அக்கதையில் தாம்கண்ட அமைதியைப் பிறரும் அநுபவித்தல் வேண்டும் என்ற விருப்பமுமாகும். இதற்கு இன்னொருகாரணமும் கூறுவர், ஆதி கவி அக்கதையைச் சமஸ்கிருத மொழியிலேயே செய்தார். சமஸ்கிருதம் படித்தவர்களின் மொழியாக நிலவியது. எனவே படியாதவரும் அக்கதையினைப் பயில்வதற்காக வெவ்வேறு மொழிகளில் அவை வெளிவந்தன என்பர்.

— தொடரும்



## சோல்பரிகண்ட யாழ்நகர் சுவாமி

11

### தெய்வம் ஒன்றே

இந்து மதத்தில் சைவம், வைஷ்ணவம் முதலிய பிரிவுகளில் பல கருத்துக்கள் மையம்சாரும் வகையிற் கூறப்பட்டுள்ளன. இவற்றால் பல தெய்வ வழிபாட்டு முறைகளோ அன்றி, ஒரு தெய்வழிபாட்டு முறைக்கு முரண்பாடு குறித்ததாகவோ கருதவிடமில்லை. எவரும் வெவ்வேறான ஆதாரங்களை அவரவர் அறிவாற்றல், மனவியல்பு, விளக்கம் ஆகியவற்றுக்கமைய விரும்பியவண்ணம் தெரிந்து வழிபடலாம். அவ்வழிபாடுகள் யாவும் ஒப்புயர்வற்ற ஒருவனையே சாருவதாகும். பலவித வழிபாடுகள் அந்த உண்மைப் பொருளின் பலவாய தன்மைகளையே குறிப்பனவாகும். அவற்றை மனித அறிவுகொண்டு மட்டிடல் முடியாது.

சிலர் அப்பனையும், சிலர் அம்மையையும், சிலர் மைந்தனையும் வழிபட விரும்புவர். சைவசமய சம்பிரதாயத்தில் சிவனுக்கும் சக்திக்கும் நான்கு மைந்தர்கள் உள்ளனர். மைந்தர் நால்வருள் முதலிருவர் முக்கியமானவர்கள். கணேசர் மைந்தர்களுள் மூத்தவர். அவர் ஆனைமுகமும் தொந்தி வயிறும் உள்ளவர். தொந்தி வயிற்றில் எல்லா உலகமும் அடங்கியுள்ளன. அவர் ஞானத்தின் திருவுருவாயுள்ளவர். அவரின் வடிவமே ஓங்கார சொரூபமாகும். வேதப் பிரமாணங்களின் வண்ணம் எந்த நற்கருமமும் செயலும் கிரியையும் ஓங்காரத்தை முதலில் உச்சரித்தும் எழுதியுமே ஆரப்பிக்கப்பெறுதல் வேண்டும். ஏனென்றால் அதுவே எல்லாவற்றின் தோற்றமும் முடிபுமாம். அதே வகையில் சைவசமய சம்பிரதாயத்திலும் கணேசனை முதலில் வழிபடாமல் எக்காரியமும் ஆரம்பிக்கப்பெறுவதில்லை.

### முருகன்

இரண்டாம் மைந்தன் முருகன். முருகன் என்றால் அழகு, இளமை, மணம் உள்ளவன் என்பது கருத்தாகும். அவன் என்றும் இளையவனாகவே கருதப்படுகிறான்.

இந்துசமய சின்னங்கள் குறிகள் யாவும் அவை நிலவுவதன் கருத்தைக் குறிக்கும் விளக்கம் அல்லது கதைகள் உடையனவாகும். முன்னொரு காலத்திலே விஷ்ணுபிரமா முதலான தெய்வங்களும் வானுலகத் தேவர்களும் அசுரர்களாற்பட்ட துன்பங்களை மேலும் சகித்துக்கொள்ள முடியாமல் இறைவனாகிய சிவபெருமானிடம் முறையிட்டார்கள். அவர் அவர்களுக்கு முருகனை அளித்தார்.

முருகன் அசுரர்களோடு கடுஞ்சமர் புரிந்து அவர்களை வென்று, தேவர்களை வாழவைத்தருளினார். முருகன் போர்க் கடவுளுமாவர். அவர் தேவசேனாபதி. அவரின் திருநாமங்களிலொன்றான கந்தசுவாமி என்பது ஆரிய புராணப் பழைமையில் யுத்தக் கடவுள் எனவரும் ஸ்கந்த என்ற பெயரின் திரிபாகும். இந்த அமைப்பில் அவருக்கு

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

★ நாவடக்கம் உள்ளவன் நாவலனைவிட மேலானவன் ★

## உங்களுக்குத் தெரியுமா?

1. செந்நிற மழை பெய்யும் இடம்
2. நீலச்சேறுள்ள கடற்கரை
3. இந்தியாவில் அதிக உப்புவிளையும் இடம்
4. இந்தியர்வில் அதிகமானேர் பேசும் மொழி
5. முயற்சியே கடமை என்னும் நாடு
6. உலகில் அதிக பருத்தி விளையும் நாடு
7. உலகில் நல்ல பருத்தி விளையும் நாடு
8. சூரியனின் மகள் எனப்படும் தாவரம்
9. தொழிற் புரட்சி முதலில் தோன்றிய நாடு
10. மரம் அரியும் தொழில் அதிகமுள்ள நாடு
11. மிகவும் குளிர்ந்த பிரதேசத்துப் பறவை
12. பாற் பண்ணைக்குப் பெயர்பெற்ற நாடு
13. யானைகள் அதிகமுள்ள ஆபிரிக்கநாடு
14. கோவேறு கழுதையுள்ள நாடு

( விடைகள் வேறிடத்தில் )

முற்ருெடர்:

## கண்டதும் கேட்டதும்

41. துன்பத்தை இன்பமாக்கத்தக்க சாதனம் அன்பு ஒன்றுதான்.
42. நல்ல சிந்தனைகளே உலகில் உயர்ந்த செல்வங்கள்.
43. தோல்விகள் எம்மைப் புத்திசாலிகளாக்குகின்றன.
44. இரக்கம் என்பது உயர்ந்த அறம்.
45. நன்மையையும் தீமையையும் செய்தவன் ஒருவன் உடனடியாக அவற்றின் பயன்களை அறுவடை செய்வதில்லை. நன்மைக்குத்தக்க மகிழ்ச்சியும் தீமைக்குத் தக்க துன்பமும் அவன் அநுபவித்தே தீரவேண்டும்.
46. தற்கொலை என்பது மிகவும் பாரதூரமான கொலை. அது செய்தவன் பச்சாத்தாபப் படுவதற்கு இடமில்லாமையால் அது கொடியது.
47. இந்த உலகத்திலேயே நரகம் இருப்பதானுல் அது சதா துயரப்படுபவனின் இதயத்திலேதான் உள்ளது.
48. சந்தர்ப்பம் என்பது ஒருவருக்கு ஒருமுறைதான் வருவது. ஆனுல் மருட்சி என்பது என்றும் வந்து கொண்டே இருக்கும்.
49. பெரியவர் என்ருல் நல்ல மனிதனின் மூளையும், நல்ல பெண்ணின் இதயமும், குழந்தையின் நோக்கும் உடையவர் என்பதேயாம்.
50. பிறர்செய்த தீமையை என்றும் நினைந்து துயரப் படுவதிலும் மறந்து முறுவலித்தல் மேலானது.

— தொடரும்

மனிதர்களின் தீயகுணங்களை பித்தளைத் தகட்டில் பொறிக்கிருேம். அவர்களின் நற்குணங்களை ஓடும் தண்ணீரில் எழுதுகிருேம். — ஷேக்ஸ்பியர்

## முருங்கை

முருங்கையிற் பல இனங்கள் உள்ளன. அகத்தியையும் முருங்கையினம் என வழங்குவதுண்டு. தவசி முருங்கை என்பது வேருென்று. முருங்கை மரத்தைச் சித்தர்கள் வெகுவாகப் புகழ்ந்து பிரம்மவிருட்சம் என்பர். அது விருட்சமாகப் பெருத்து வளராவிட்டாலும் அது மரமாக வளர்வதுண்டு. அதைப் பெரிதாக வளரவிடாமல் ஒடித்து வளர்க்க வேண்டும் என்னும் கருத்தில் ''ஆண்பிள்ளையை அதட்டி வள, முருங்கை மரத்தை ஒடித்துவள'' என்று நாடோடியாகக் கூறுவர்.

முருங்கைக்கு ஊருடம், கருஞ்சனம், சௌபாஞ்சனம், தவுசயம், திரிபலம், முகந்தம், மூலகபல்லவம் முதலிய பெயர்களும் உண்டு. எந்த நோய்க்கும் பலவகையில் பழக்கமான மருந்தாகச் சித்த வைத்தியர்கள் போற்றும் சிறந்த தாவரம் முருங்கை. இதை ஒரு சர்வசஞ்சீவி என்பர். எல்லாவீட்டு வளவுகளிலும் உள்ள இம்மரத்தை மருந்துப் பொக்கிஷம் என்பர்.

### முருங்கை இலை

முருங்கை இலையில் இரும்பு, தாமிரம் சுண்ணும்புச் சத்து நிறையவுண்டு. இதனை நெய்யில் வதக்கியுண்டால் இரத்தசோகை என்னும் நோய் நீங்குவதோடு நல்ல இரத்தம் ஊறும். தோலில் உண்டாகும் சொறி சிரங்கு கரப்பன் தேமல் முதலியன நீங்கும். பல் உறுதியாகும். இன்னும் கண்ணேய், மந்தம், வெப்பு, மூர்ச்சை முதலியவற்றுக்கும் இது நல்லது. இதன் சாறு உஷ்ணத்தைப்போக்கும். சர்க்கு நீர்க்கட்டை நீக்கும்.

### முருங்கைக் காய்

முருங்கைக்காய் மிகவும் உபயோகமான மரக்கறி. பத்தியத்துக்குப் பயன்படும் முதல்தரமான காய்கறி. கடுமையான இரத்த சீதபேதி, வயிற்றுப் புண், தலைவலி, வாய்ப்புண் முதலிய நோய்களுக்கு முருங்கைக்காய் கை கண்ட மருந்தும் உணவுமாகும். முருங்கைக்காயை வேக வைத்துச் சிறிதளவு உப்பிட்டு உண்ணல் சிறந்த முறை. சிலர் நெய்யில் பொரித்து உண்பதும் நல்லது என்பர்.

முருங்கைக்காய்ச் சாம்பார் மிகவும் உருசியுள்ளதாய் இருப்பதோடு, மலச்சிக்கல், வயிற்றுப்புண், கண்ணேய் முதலியவற்றுக்கு அரிய மருந்தாகும். பல் இறுகிக் கெட்டியாவதற்கும் முருங்கைக்காய் முதல்த்தரமான உணவு. இன்னும் இரத்த சுத்திக்கும், சிறுநீர்ச் சுத்திக்கும், வாய்ப் புண்ணுறுவதற்கும் முருங்கைக்காய் பயன் தரும். முருங்கைக்காய் சேர்த்துவைக்கும் முதல்த்தரமான சூப் காய்ச்சல், மூட்டுவலி முதலிய வேதனைகளை நீக்கும்.

முருங்கைக்காய் வாதநோயைப் போக்கிவிடுவதோடு தாது விருத்திக்கும் நல்லது. முருங்கைப் பிஞ்சு விந்து நட்டத்துக்கு ஈடுசெய்வதோடு எலும்புருக்கிநோய் வெப்பம் முதலியவற்றுக்கும் நல்லது. முருங்கை வித்து விந்தை இறுகச் செய்து மேனியை அழகுபடுத்தும். முருங்கை வித்தை அரைத்துப் பாலிலிட்டுப் பருகிவந்தால் தாது புஷ்டியாகும்.

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

## பெரியவர் நினைவுகள்
## பிறீமன்

இருபதாம் நூற்றுண்டில் யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபராயிருந்த ஆங்கிலேயருள் பிறீமன் மிகவும் அருமை யானவர், வைதிக தருமம் தெரிந்தவர், குடிமக்களை நன்கு பாதுகாத்தவர், காட்சிக்கெளியராய்க் கடுஞ் சொல்லில் லாதவராய்க் கடமை பார்த்தவர். கடவுளை வழிபடுங்கள், நல்லொழுக்கம் உள்ளவராய் வாழுங்கள். மழை பெய்யும் பூமி குளிரும் தானியங்கள் விளையும் என்று அறம்போதித்து அறவழியில் ஆட்சிப்பொறுப்பை நடாத்தியவர். கோயில் களை அழியவிடாதீர்கள் என்று சைவாசாரத்தைப் பாது காத்த பெரியார் பிறீமன்.

பொருளாதாரத் துறையில் யாழ்ப்பாணத்தாரின் முது செலும்புபோல இருந்த மலையாளப் புகையிலை வியா பாரத்தை முறியவிடாது பாதுகாத்தவர் பிறீமன். புகை யிலையின் தீர்வை தொண்ணூறு ரூபாவாக இருந்ததை தொளாயிரம் ரூபாவாக மலையாள மந்திரியார் அதிகரித்த போது பிறீமன் தேசாதிபதி மக்கலம் அவர்கள் மூலம் தீர்வையை முன்போல் தொண்ணூறு ரூபாவாக்கிக் கொடுத்தார். ★

---

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

**சோல்பரி........**

ஆறுதிருமுகங்கள் உள்ளன. அவை உலகிலுள்ள எல்லாச் செயல்களையும் குறிப்பனவாகும். அவரின் பன்னிரு திருக் கரங்களில் பலவிதமான படைக் கலங்கள் உள்ளன. கணே சக் கடவுள் ஞானத்துக்கு அதிபதிபோல, முருகக்கடவுள் போர்வினைக்குரியவராவர்.

### முருகனின் சக்திகள் மூன்று

முருகப்பெருமானின் சக்தி எனப்படும் ஆற்றல் மூவ கைப்பட்டனவாகும். இரு சக்திகள் அவரின் தேவியராக வும், மூன்றுவது சக்தியாகிய வேல் தெய்விக ஞானத்தைக் குறிப்பதாகும், அது ஞானசக்தி எனப்படும். வேலாயுதம் ஆன்மாவின் அறியாமையாகிய தகர்க்கமுடியாத பகையை ஊடுருவித் தாக்கும் வல்லமை உள்ளது.

முருகனின் செயலாற்றலைக் குறிப்பது கிரியாசக்தியாகும். அவரின் விருப்பாற்றலையும் அன்பையும் குறிப்பது இச் சாசக்தியாகும். (கிரியா சக்தியைத் தெய்வயானை எனவும், இச்சாசக்தியை வள்ளிநாயகி எனவும் வழங்குவர்.)

— தொடரும்

---

உங்களுக்குத் தெரியுமா? **விடைகள்.**

### எங்களுக்குத் தெரியுமே

1. இத்தாலி 2. பசுபிக்சமுத்திரம் 3. குஜராத்தி
4. இந்தி 5. ருசியா 6. அமெரிக்கா 7. எகிப்து
8. பருத்தி 9. இங்கிலாந்து 10. கனடா 11. பென்குயின்
12. டென்மார்க் 13. கொங்கோ 14. பாலஸ்தீனம்

13 ஆம் பக்கத் தொடர்ச்சி: முருங்கை ..

### முருங்கைப்பட்டை

முருங்கைப்பட்டை உலோகச்சத்துகள் நிறைந்தது. உணவில் கலந்து உடம்பிற்சேரும் விஷங்களை உடனடி யாக நீக்கவும், நரம்புத்தளர்ச்சி நரம்புக் கோளாறு முத லியவற்றுக்கும் முருங்கைப்பட்டை முதல்தரமான மருந் தாகும். பட்டையைப்போல இதன் வேரும் உபயோக மானது.

### முருங்கைப் பிசின்

கோந்து எனவும் வழங்கும் முருங்கைப் பிசின் காது வலிக்கு நல்ல மருந்து. முருங்கைப் பிசினுடன் முருங்கை வேரும் சேர்த்துக் காய்ச்சிய தைலம் உண்டுவந்தால் நரை திரை உண்டாகாது.

### முருங்கை வேர்

முருங்கை வேர் கபம், சந்நி, சுரம், வாதம் முதலிய நோய்களை நீக்கும். முருங்கை வேருடன் கொன்றை வேரும் சேர்த்து இடித்துப் பிழிந்து காதில் விட்டால் செவிட்டுத் தன்மை குறையும். முதுமையை விரட்ட முருங்கையைப் பயன் செய்வோம். ★

---

முற்றொடர்:

## வழக்கிலுள்ள வடமொழிகள் சில

| | | |
|---|---|---|
| சித்திரவதை | | வன்கொலை |
| சித்து | — | அறிவு |
| சிநேகம் | | நட்பு |
| சிநேகிதன் | — | நண்பன் |
| சிந்தனை | — | எண்ணம் |
| சிந்தித்தல் | — | நினைத்தல் |
| சிந்தூரம் | — | செந்தூள் |
| சிரம் | — | தலை |
| சிரஞ்சீவி | — | நீடுவாழ்வோன் |
| சிரத்தை | — | அன்பு |
| சிரமம் | — | தொல்லை |
| சிராத்தம் | — | இறந்தவர் கடன் |
| சிரேஷ்டன் | — | தலைவன் |
| சிலாக்கியம் | — | நன்மை |
| சிலேட்டுமம் | — | சளி, கோழை |
| சிவிகை | — | பல்லக்கு |
| சின்னம் | — | அடையாளம் |
| சின்னபின்னம் | — | உருக்குலைவு |

— தொடரும்

---

### உபவேந்தரின் வாழ்க்கைத் துணைநலம்

யாழ் வளாகத்து உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களின் பாரியார் கமலா அவர்கள் மறைவையிட்டு வருந்துகிறோம். அவரின் இறுதியாத்திரை 25-4-79 புதன்கிழமை மாலை தெல்லிப்பழையில் இடம் பெற்றது. அம்மையாரின் அகால மரணத்தையிட்டு வருந் தும் உப வேந்தருக்கும் அவர் பிள்ளைகளுக்கும் உறவினருக்கு எம் அநுதாபம். அம்மையார் அன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். ★

---

★ பணிவிடைபுரிபவன் பக்குவம் அடைகிறான் ★

1-ஆம் பக்கத் தொடர்ச்சி

## குழந்தைகள் ஆண்டு....

ஆயிரக்கணக்காகச் செலவிட்டு விழாக்களையும் வேடிக்கைகளையும் வெறி விருந்துகளையும் கொண்டாடுகிறவர்கள் ஒரு மணிநேர இன்பத்துக்குச் செலவிடும் பணத்தை ஒரு தலைமுறை வாழ்வதற்கு உபகரிக்கலாம் என்பதை அறிதல் வேண்டும்.

பொழுது போகாமல் 'ஆகா ஊகூ' என்று சத்தமிட்டுத் தெருவெல்லாம் சுற்றி வருகிறவர்கள் பரீட்சைகளுக்கு முன் தினம் பத்துநிமிட நேரத்தைக்கூட வீணாக்காமல் படிப்பதை நினைத்தல் வேண்டும்.

### உரிமை

மனிதர் உரிமை, மகளிர் உரிமை போலச் சிறுவர் உரிமையும் உண்டு. பிள்ளைகளை மனிதராக்குவதற்குப் பெற்றோரும் சமூகமும் அரசும் என்ன செய்தல் வேண்டும் என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் கருத்திற்கொள்ளுதல் வேண்டும். ஈன்று புறந்தருதல், சான்றோனாக்குதல், வீரனாக்குதல் நன்னடை பயிற்றுதல் என்பன பழைய நெறி முறைகள். இவற்றில் இக்காலத்தில் பெரும் பொறுப்பு பெற்றோர் மேலதாகும்.

பிள்ளைகளின் உடல் நிலைக்கும் மன நிலைக்கும் ஊறுபாடு உண்டாகாமல் இருத்தற்கு அரசு கவனமெடுத்தல் வேண்டும். உலகமெங்கும் உள்ள பிள்ளைகளுக்குக் கண்ணீர் வடிப்பவர்கள் உள்ளூர்ப் பிள்ளைகளின் நல்வாழ்வுக்கு முதலில் ஊக்கம் எடுத்தல் வேண்டும். பிள்ளைகளின் இயல்பூக்கங்கள், பற்றுக்கள், நாட்டங்கள், செயல் திறமைகள், ஆற்றல்கள் என்றித்திறத்தனவற்றை முனை முறியாமல் முளை முறியாமல் நெறிப்படுத்துதல் வேண்டும்.

சிறுவர்களின் வளர்ச்சிப் பருவத்தில் முனையையும் முளையையும் முறித்துவிட்டு, அவர்களுக்குப் புனர்வாழ்வு, மறுவாழ்வு பழக்குவதற்குப் படாதபாடு படத்தேவையில்லை.

நாட்டில் கைம் பெண்கள் விதவைகள் ஏழைகள் பிள்ளைகளை வளர்ப்பதற்குப் படுந்துன்பத்தை வசதி படைத்த சமூகமும் அரசும் கண்டுபரிகாரந்தேடவேண்டும். மேற்கு நாட்டவர் தத்து எடுத்துப் பிள்ளைவளர்க்கும் திட்டத்தை இந் நாட்டவரும் அறிதல் வேண்டும்.

### ஆசிரியர்

பிள்ளைகளை மனிதராக்குவதில் ஆசிரியரின் பங்கு மிகப் பெரிது. தமது பொறுப்பிலுள்ள மாணவர்களின் போக்கினையும் அவர் தம் குடும்ப நிலையினையும் ஆசிரியர் அறிந்திருத்தல் நன்மை பயக்கும். பிறர் பிள்ளை தலை தடவத் தன் பிள்ளை தானே வளரும். பெரும்பாலான ஆசிரியரின் சொந்தப் பிள்ளைகள் நன்றாக வருவதற்கு அடிப்படைக் காரணம் ஆசிரியரின் பரோபகார சேவையே எனலாம்.

— தொடரும்

எல்லாவற்றையும் தன்னுள் அடக்கியுள்ளதே சமய வாழ்வு. எல்லாவகையிலும் எல்லாக்காலத்திலும் வாழ்வை ஊடுருவி நிற்பதே சமயம் என்றின்னுமோர் வகையாகவும் கூறலாம்.

—மகாத்மா காந்தி

## All about Children

Thiruvalluvar after describing the virtues of domestic life narrates the blessing of having a good partner in life. Then he describes the blessing of having children.

"Among all acquisitions or assets we know of none greater than that of children who can understand what should be understood.

For seven generations to come no evil will befall a man if he begets children of spotless Character.

A man's children are said to be his wealth. and this wealth comes to him from their actions.

Sweeter than ambrosia is the food into which one's children have dipped their little hands.

To embrace the children is a delight to the body; to hear their pratte is a delight to the ear.

'The pipe is sweet, the lute is sweet' say those who have not heard the prattle of their own children.

The good a father can do his son is to make him occupy the first rank in an assembly.

To find one's children more intelligent than oneself is good for all the world.

Far greater is the joy of the mother when she hears her son called wise than that she felt at the time she gave birth to him.

The services or the gratitude of a son to his father is to have it said, "What austirities has his father done to beget such a good son?"


மில்க்வைற் செய்தி

மில்க்வைற் செய்தி தேவையானோர் பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு தொகுதியை அனுப்புங்கள். நாங்கள் தபாற்செலவு கட்டிச் செய்தியை அனுப்புவோம்.

நீல சோப் மேலுறை 10, நீம் சோப் மேலுறை 2,
பார் சோப் மேலுறை 2, மெடிக்கேட்டட் ,, 2,
சலவைப் பவுடர் மேலுறை 2.

மில்க்வைற் த.பெ.இல. 77, யாழ்ப்பாணம்.


★ மயக்கத்தில் உள்ளவன் மாண்டவனுக்கு நிகர் ★

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

## திருநாவுக்கரசுநாயனர்....

வணங்கும் போதும் தாமரை மொட்டுப்போலுள்ளன. அடியவர்களுக்குப் பிறவியும் வினையும் சுடும் வேளையில் நிழல் கொடுப்பன. கழன்றுபோகா வினைகளைக் கழன்று நீங்கச் செய்வன. காலங்கடந்துள்ள ஒளியாயுள்ளன. வலிமையுள்ள இராவணனை வலியடங்கி மலையின்கீழ்க் கிடந்து அழுமாறு அடக்கியவை. மார்க்கண்ட மாமுனிக்காகக் கூற்றுவனை உதைத்தவை. தேவர்கள் யாவரும் பார்த்திருப்ப ஊர்கள் தோறும் பிச்சையெடுப்பதற்கு உலாவித் திரிந்தன. பிச்சை எடுத்தமை ஆண்மையில்லை என்பார் அலி என்று சொல்ல நின்றவை.

## 1979 மே மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | செவ்வாய் | — | மே தினம் |
| 2. | புதன் | — | சீரணி நாகம்மை கொடி |
| 7. | திங்கள் | — | ஏகாதசி விரதம் |
| 9. | புதன் | — | பிரதோஷ விரதம் |
| | | | உமாபதிசிவம் குருபூசை |
| 11. | வெள்ளி | — | சித்திரைப்பூரணை, சீரணி தேர் |
| 22. | செவ்வாய் | — | நல்லூர் சங்காபிஷேகம் |
| | | | தண்டிகை உற்சவம் |
| 23. | புதன் | — | பிரதோஷ விரதம் |
| 25. | வெள்ளி | — | அமாவாசை விரதம் |

### வடபிரதேசப் போக்குவரத்து சபை
### காரைநகர் சாலை
### ஞானவைரவர் ஆலய
### மண்டலாபிஷேக வைபவம்

சென்ற 23-4-79 திங்கட்கிழமை மாலை நடைபெற்ற விழாவில் பங்குபற்றிய மில்க்வைற் தொழிலதிபர் அங்கே மரங்கள் நாட்டுவதற்கு உதவினர். அவ்வமையம் தேசியப் பேரவை உறுப்பினர் தா. திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் மில்க்வைற் பனைப் பிரசாரத் தொண்டர் சு. பரநிருபசிங்கம் B.Sc. அவர்கள் மரங்களின் பயன்பற்றிப்பேசினர்கள்.


## "மில்க்வைற் அப்பியாசக் கொப்பி"

100 மில்க்வைற் நீலசோப் அல்லது
10 மில்க்வைற் பார் சோப் அல்லது
10 மில்க்வைற் சலவைப்பவுடர் அல்லது
50 நியூமில்க்வைற் சோப் மேலுறைகளை
அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்


பெரிய கொடையே ஆனாலும் அன்பின்றிக் கொடுத்தால் அது கொடையாகாமல் தேய்ந்து போகும்.

—ஷேக்ஸ்பியர்





மில்க்வைற் தொழிலகம்
த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்


## சுவாமிநாத பண்டிதரும் பெரியபுராணமும்

கந்தமடத்தைச் சேர்ந்த தம்பையா உபாத்தியாயர் என வழங்கிய சுவாமிநாத பண்டிதர் அவர்கள் வேதாகமங்களில் மிகவிருப்பும் பக்தியும் கொண்டவர். இளமையில் நாவலரவர்களின் மருகர் பொன்னம்பலபிள்ளை அவர்களிடம் புராணங்களையும் உரைசொல்லுந் திறனையும் நன்கறிந்தவர். எனது குருநாதன் என்று பிள்ளையவர்களிடம் அபிமானங்கொண்டொழுகியவர். சென்னையிலும் தேவகோட்டை முதலிய இடங்களிலும் நகரத்தார் உவக்கும் வண்ணம் பெரியபுராணப் பிரசங்கஞ் செய்து அவர்கள் செய்த உபகரிப்புகளைக் கொண்டு திருச்செந்தூர் முதலான தலங்களிற் பாடசாலைகளை நிறுவிப் பரிபாலித்தவர். பெரிய புராணத்தைத் தினமும் போற்றிப் படிப்பவர். தமிழ் நாட்டில் பாலசுப்பிரமணியர் வித்தியாசாலை, அறுபத்து மூவர் வித்தியாசாலை என்பன அவரால் நிறுவப்பெற்றனவாகும். அவர் செய்த பெரியபணி அடங்கன்முறை என்னும் தேவாரத் திருமுறைகளைப் பிழையறப் பதித்ததோடு தலவரிசை தவறாது தொகுத்துத் தந்ததுமாகும். ஒவ்வொன்றுக்கு ஒவ்வொருவர் வரிசையில் அவர் வரலாறு பின்னர் விரிவாக வெளிவரும். ★

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே, பி. அவர்கள்.
கௌரவ ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் 1-5-79.